# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6 46



தமிழக மேலவைக்கு நியமன உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சென்னை மாவட்டச் செயலாளர் திரு. நீலநாராயணன் அவர்கள் 22—4—70ல் பதவியேற்ற காட்சி.

விலை 20 காசு 31-5-70

# கேட்டீரா/ சேதி!

## வரலாறு திரும்புகிறதோ?

ரஷ்யாவின் அரசியல் வரலாறு, சுவடு மாருமல் அப்படியே திரும்பத் தொடங்கி இருப்பதுபோல் தெரிகிறது. 1917-ல் ரஷ்யாவில் நடைபெற்ற புரட்சியின்போது, இராணுவத் துறையில் ஏற்படுத்தப்பட்ட மனமாற்றமே, புரட்சியின் வெற்றிக்கு ஆணிவேர் என்று மதிப்பிடப்படுகிறது. அதிலும் கடற்படைப் பிரிவு முக்கியப் பங்கு வகித்திருப்பதாக அந்த புரட்சி பற்றிய வரலாறு எடுத்துக்காட்டுகிறது. இவைகளில் ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள் காரணமாகவே இரண்டாவது உலக யுத்தத்தில் ஜெர்மனியின் பக்கம் இருந்த ரஷ்யாவுக்கு அறிவு புகட்டப்பட்டு, அதன் பிடியிலிருந்து விடுபடவும் வழி வகுத்ததாகத் தெரிவிக்கிறது அந்த வரலாறு, இப்போது மீண்டும் 1970ல் இதே போன்ற ஒரு நிலை திரும்பி இருப்பது சிறப்பான கவனத்துக் குரியதாகும். புரட்சிக்குப் பிறகு, பொலிவு மிக்க ஒரு அரசு அங்கே அமைவதைத் தடைசெய்ய உலக வல்லரசுகள் ஒட்டு மொத்தமாக உதவின. என்ருலும் ரஷ்யா அன்று வெற்றி கண்டது, அன்று முதல் இன்று வரையில் ரஷ்யா, தன் கம்யூனிசப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டேதா னிருக்கிறதே ஒழிய, போய்ச் சேர்ந்துவிடவில்லை. எத்தனையோ தடைகளை அது கடக்க வேண்டி யிருந்திருக்கிறது. இப்போது புதிய தடையொன்றைச் சமாளிக்க வேண்டிய நிலை யேற்பட்டிருக்கிறதென்றே யூகிக்க வேண்டி யிருக்கிறது 1917 போலவே, 1970லும் ரஷ்யக் கடற்படையில் குழப்ப மேற்பட்டிருக்கிறதாம்! தங்களுக்கு அரசியல் சுதந்திரம் வேண்டும் என்று அதிகாரிகள் கேட்கிருர்களாம்! படைவீரர்களிடையேயும் இந்த உணர்வு பரவிக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாக கடற்படை அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டிருக்கிருர்களாம்! ஒரு அதிகாரி, அரசாங்கத்தால் சுட்டுக் கொல்லப்பட்டு விட்டாராம்! அன்று கம்யூனிஸ்டுக் கட்சியின் மறைவுப் பிரசாரம், இந்த போர்க்குணத்தை ஊக்கியது. இன்று யார் ஊக்குவது என்பதை இன்னமும் அந்தக் கட்சி கண்டுபிடிக்க வில்லையென்ருல், அது வியப்புக் குரியது தான்! எப்படியாஞலும் இராணுவத் துறையில் உட்குழப்பம் உருவாகிக் கொண்டிருக்கிறது என்பது கவலைதரக் கூடிய செய்தி தான்!

## வழக்குப் போடுங்கள்!

தமிழ் நாட்டில் அண்மையில் கொண்டுவரப்பட்ட நில உச்ச வரம்புச் சட்டம் காரணமாக அங்கும் இங்குமாக மிகச் சிலரே பாதிக்கப் பட்டிருக்கிருர்கள். இந்தப் பாதிப்புக் கூட யாரும் நீதிமன்றம் சென்று நீதி தேடிக் கொள்ளவேண்டிய அவசியத்தை எவருக்கும் தரவில்லை என்றே தெரிகிறது. நீதி மன்றங்களின் துணைகொண்டேதான் இந்த நாட்டு அரசியல் முழுக்க முழுக்க நடைபெற வேண்டுமென்பதில் தீராத வேட்கையுடைய மதிப்புக் குரிய ராஜாஜி அவர்கள், வழக்கம் போல், இப்போதும் இந்த உச்ச வரம்புச் சட்டப் பற்றி குறைபட்டுக் கொண்டிருக்கிருர். "தமிழக அரசின் புதிய நில வரம்புச் சட்'த்தால் பாதிக்கப்பட்ட எவருமே இது செல்லத்தக்கதா என்று நீதிமன்றம் பரிசீலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் காணும். இது குறித்து வருந்துகிறேன். மிகவும் காலதாமதம் செய்வதால் அது காரணமாகவே நீதி மன்றம் மூலம். நிவாரணம் காண இடமில்லாமல் போய்விடக்கூடும்" —என்று கருத்துத் தெரிவித்திருக்கிருர் இந்தக் கிழமை. "செல்லத்தக்கதா?" என்று பரிசீலிக்கவே நீதி மன்றம் போகவேண்டும் என்று கூறுகிற ராஜாஜி அவர்கள், தவறி விட்டால், "நிவாரணம் காண இடமில்லாற்போய்விடக்கூடும்" என்று கூறுவதன் மூலம் அநீதி இழைக்கப் பட்டிருப்பதாகவும் மறைவாக எடுத்துக்காட்டுகிருர். எந்த ஒன்றைப் பற்றியும் ஒரு கருத்தைக்கூற பேச்சுரிமை, எழுத்துரிமை படைத்த ஒரு நாட்டில் எவருக்கும் உரிமை உண்டுதான். ராஜாஜியே இதனை பலதடவை எடுத்துக்காட்டியுமிருக்கிருர். இந்தச் சட்டம் செல்லுமா? அந்தத் திட்டம் ஆகுமா? என்றெல்லாம் நீதிமன்றத்திடம் கேட்கத் துடியாய்த் துடிக்கும் அவர், நில வரம்புச்சட்டம் செல்லாது என வழக்குப்போடுங்கள் என்று மற்றவர்களைத் தூண்டுவதில் வியப்பொன்றுமில்லையே!

## எல்லாருக்கும் நிலம்?

அனைத்திந்தியமட்டத்தில் செயல்படும் ஒரு அரசியல் கட்சி, ஒரு திட்டத்தை அனைத்திந்தியமட்டத்தில் செயல்படுத்துவதென்பது மிகவும் கடினமான ஒன்றேயாகும். இந்தக் கடினமான காரியத்தைதான் இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி விரைவில் மேற்கொள்ள விருப்பதாகச்செய்தி வந்திருக்கிறது வரும் ஆகஸ்டுத் திங்கள் 15-ம நாளன்று துணைக்கண்டம் முழுவதும் ஒரு போராட்டம் நடத்த இருப்பதாவும், போராட்டத்துக்கான காரணம், நிலமில்லாதவர்களுக்கு நிலம்கோருவதும், இருப்பனவற்றில் ஆக்கிரமிபபுச் செய்துகொள்வது என்பதுமாகும். துணைக் கண்டத்தில் நிலவுடைமையாளரைவிட நிலமில்லாதவர்கள்தான் பெரும்பான்மையினர்! அனைவருக்குமே நிலம் கிடைக்குமாஞல் அதைவிட மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி வேறேதுமிருக்க முடியாது தரமுடியுமா? தருவதற்கு இருக்கிறதா என்றெல்லாம் கணக்குக் கேட்கவும் கூடாது. மறுப்புரைக்கவும் கூடாது. எல்லோருக்கும் நிலம்! அவ்வளவுதான்! வடபுலத்திலே பல மாநிலங்களில் இன்னமும் சரியான அளவுக்கு நிலச் சீர்திருத்தத் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை, அங்கே கம்யூனிஸ்டு கட்சி இதுபற்றி போராட முடிவெடுத்தலைப் புரிந்து கொள்ள முடிகிறது. சில மாதங்களுக்கு முன்பு கேரளாவில். நிலப் போராட்டம் நடத்த இடது கம்யூனிஸ்டுகள் முடிவெடுத்ததைப் புரிந்துகொள்ள முடியாததைப் போலவே, தமிழகத்தில் வலது கம்யூனிஸ்டு, இப்போது போராட்டம் நடத்த எடுத்திருக்கும் முடிவும், புரிந்துகொள்ள முடியாதது தான்! ஆஞல், புரிவது மட்டும், எல்லாருக்கும் நிலம் என்பதுதான்! தமிழக முதல்வர் சரியான பதில் தந்திருக்கிருர். நிலைமைகளை விமர்சிக்கும் சில கட்சிகள் பகைமைக்கு வித்திடுகின்றன. இந்த வித்துக்கள் முளை காணுமா? முளை கண்டு கருகுமா? முளை காணுமலே போய் விடுமா? என்பவைகளைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்!

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 31—5—70 | இதழ் 46


# தடுக்கப்பட வேண்டும்

இந்தியத் துணைக்கண்டத்து வங்கித் தொழிலைப் பற்றி—குறிப்பாகத் தமிழ்நாட்டில் இருக்கும் அவைகளின் கிளைகளைப் பற்றி பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு சிறுபான்மை இனம் ஒன்றின் ஆதிக்கமே, மேலாதிக்கம் செலுத்தும் கையிலேயே பெரும்பான்மையும் இருக்கின்றன என்பது பெரியார் அவர்களது புள்ளி விவரத்துடன் கூடிய கருத்தாகும். இந்தக் கருத்தினை உண்மையென்று நிரூபிக்கத் தக்க வகையில் அண்மையில் சென்னையில ஒரு நிகழ்ச்சி நடந்திருப்கிறது மிக மிக வருத்தத்துக்கும், வன்மையான கண்டனத்துக்கு முரியதாகும்.

காலப்போக்கு மனிதனது தேவைகளை மட்டுமே உற்பத்தி செய்து கொண்டிருக்கவில்லை. மனத்தின் தூய தன்மையினைக் கறைபடிந்ததாக்கும் பணியிலும் அது வெற்றிகரமாக ஈடுபட்டிருக்கிறது என்று ஏற்றுக் கொள்ளத் தக்க விதமாக சென்னை நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

நாட்டில் வேலை நிறுத்தங்களும், தேவைக்குரிய கோரிக்கைகளும் மிக அதிக அளவுக்குப் பிறந்துகொண்டிருக்கிற நாளாக மாறிவிட்டிருக்கிறது இன்று.

ஒவ்வொரு தொழிலிலும் ஈடுபட்டிருப்பவர்கள், ஒவ்வொரு விதமான கோரிக்கைகளை முன்வைத்து போர்க்குரலில் பொதிவது சாதாரண நடைமுறையாகி இருக்கிறது.

இதைப்போலவேதான், வங்கித் தொழிலில் ஈடுபட்டிருக்கும், ஒரு பகுதியினர் இந்தக் கிழமை வேலை நிறுத்தத்திலீடுபட்டதன் காரணம்பற்றியோ, அது அவசியமா, அல்லவா என்பதுபற்றியோ இங்கே நாம் ஆராயவில்லை.

வேலை நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது என்றதும், அதனை நிறுத்தவும், குறைபாடுகளைக் கேட்டறிந்து களைய முயல்வதும், அந்த மாநில அரசின் தலையாய கடமையாகும்.

மாநில விவகாரத்துக்குரிய தல்லவாயினும், பொது அமைதிகருதி, மாநிலஅரசு அதிலேஆர்வம் காட்டுவது என்பதும் தொன்றுதொட்டுள்ள ஒரு பழக்கமே யாகும்.

இந்த ஆர்வம் காரணமாகவே, தமிழக முதல்வர் தலையிட்டு நெய்வேலியை அமைதி நிலைக்குக் கொண்டு வந்தார், ஓடாது உறங்கிக் கொண்டிருந்த இரயில் எஞ்சின்களை ஓடச் செய்தார். தேங்கிக் கிடந்த துறைமுகப் பொருள்களை ஏற்றி இறக்க ஆவன செய்தார்.

இதைப் போன்றுதான். தொடர்புடைய வங்கி ஊழியர்களது வேலை நிறுத்தம் தொடர்பாக, குறிப்பிட்ட வங்கி நிறுவன அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள, தம் செயலாளர் மூலம் விழைந்திருக்கிறார்.

"இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்" என்ற தலைப் பெயருடன், நாட்டுடைமையாகி இருக்கும் இந்த வங்கியின் அதிகாரி இந்த விஷயத்தில் கடைப்பிடித்திருக்கும் போக்கு, நமக்குப் பெரியார் அவர்களது பொன்னுரைகளை நினைவுபடுத்தத் தக்கதாக அமைந்திருக்கின்றது.

தமிழக முதல்வரின் உதவியாளர் ஒருவர், இது தொடர்பான விவரங்களைக் கேட்டறிய, உரிய நிறுவன அதிகாரிகளுடன், தொலை பேசி மூலம் தொடர்பு கொண்டபோது. "இது தொடர்பாக எவருடனும் தொடர்பு கொள்ள விரும்பவில்லை" என்று பதிலளித்திருக்கிறார்.

இதைப் போலவே, அதே நிறுவன அதிகாரியுடன் நாடாளு மன்ற உறுப்பினரான மாறன் அவர்கள், தொடர்பு கொண்ட போதும், ஒழுங்கான தகவலைத் தர மறுத்திருக்கிறார் அந்த நிறுவன அதிகாரி. பிறகு அவரே, செய்தியாளர்களிடம் சமாதானம் கூறவும் முன்வந்திருக்கிறார் என்றால், இது வங்கித் தொழிலின் நலனுக்கு மட்டுமல்லாமல், நாட்டின் நலனுக்கும் கேடுண்டாக்கும் போக்கேயாகும்.

அதுவும் அரசுடைமையாகி இருக்கும் ஒரு வங்கியின் நிலை இது என்றால், வங்கிகளைப் பற்றிய பொது மக்களின் கருத்து மாறிவிட ஏதுவாகிவிடக்கூடும். மக்கள் கருத்து மாறுகிறதுஎன்றால், திட்டம் கெடுகிறது என்பது கூறாமலே பெறப்படுவதாகும். திட்டம் ஒருவரால் கெடுக்கப்படுகிறது என்றால்?......

பொது விவகாரங்களில் தொடர்புடையவர்கள் இதுபோன்ற வருந்தத்தக்க நடைமுறைகளை மேற்கொள்வது விரும்பத்தக்கதல்ல! மாநில அரசுத் தொடர்புடையனவல்ல வென்றாலும், அந்த அரசின் அமைதித் தன்மைக்கும், கொள்கை கோட்பாடுகளுக்கும் இணங்கி ஒத்துழைப்புத் தருவதுதான் புத்திசாலித் தனமுமாகும்.

இவைபோன்ற ஒன்றிரெண்டு சம்பவங்கள்தான் என்றாலும், "கூடை செங்கல்லும் பிடாரி"தான் என்று மக்கள் கருத இடந்தந்துவிடக்கூடும்.

இதுபோன்ற தீய நடைமுறைகளும், போக்குகளும் உடனடியாகக் களைந்தெறியப் படவேண்டும். அப்போதுதான் தீய நடைமுறைகளுக்கான ஊக்கம், தடுத்தொழிக்கப்பட்டதாக இருக்கமுடியும்.

★




[26]

காவலாளிகளில் ஒருவனை அழைத்து, அரசர் ஏதோ கூறினார். அவன் விரைந்து சென்றான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம், மன்னரின் மெய்ப் பாதுகாவலர் அங்கு வந்து சேர்ந்தனர். மன்னர், "ஆணவம் பிடித்த இவனையும், சாகசமிகுந்த இவளையும் சிறையில் தள்ளுங்கள்; தனித்தனி சிறையில் கடுங்காவலுடன் அரண்மனைக்குள்ளாக இருக்கும் பிரத்தியேகச் சிறையில்" என்று உத்திரவிட்டார். இருவரும் மெய்ப் பாதுகாவலரால் இழுத்துச் செல்லப்பட்டனர். மன்னரும் மற்றக் காவலாளிகளும் அரண்மனைக்குச் சென்றுவிட்டனர். நான் மட்டுமே, நெடுநேரம் சிந்தாகூலனாக உலவிக்கொண்டிருந்தேன். யாருடைய நிலைமை எப்படி இருந்தால்தான் என்ன, அந்த நிலவு வழக்கம்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

சிறையிலே, என் அண்ணனும் அவருடைய மமதை விழியாலும் மொழியாலும் மருட்டிய தவமணியும் அடைபட்ட செய்தி, மெள்ள மெள்ள நகருக்குள் பரவலாயிற்று. ஊரிலே இதுபற்றி விபரீதமான வதந்திகள் பரவாதிருக்க வேண்டுமென்று கருதிய என் தந்தை வம்பளப்போருக்குக் கடுந் தண்டனை தரப்படும் என்று முரசறைவித்தார். நடந்ததைச் சுருக்கமாக மக்களுக்கு அறிவிக்குமாறு பிறகு மந்திரிக்குக் கட்டளையிட்டார். "ஆஸ்ரமத்திலே இருந்த அந்தப் பெண் ஒரு ஜாலக்காரியாம். இளவரசருக்கு அவள் ஏதோ மருந்திட்டு மயக்கினாளாம். அவளும் இளவரசருமாகச் சேர்ந்து சதி செய்து, மன்னரைக் கொல்லமுயன்றனராம்." என்று மக்கள் பேசலாயினர். மன்னரின் கோபம் தணிந்தபாடில்லை. பிரதானியர்களிலே சிலர் சிறுமைக்குணம் கொண்டவர்கள். அவர்கள். என்னாலேயே, இளவரசருக்கு இந்த இடுக்கண் நேரிட்டதென்று பேசிடக் கேட்டேன். என் மனம் பதைத்தது. என் அண்ணனுக்குச் சொந்தமான அரச உரிமையை நான் அபகரிக்கச் சதி செய்து, இளவரசரை சிறையில் அடைபடச் செய்தேன் என்று கூறும் கயவரின் நாவைத் துண்டித்திட எண்ணினேன். அவ்வளவு ஆத்திரம் எனக்கு. கேவலம் அரசபோகத்துக்காக, உடன் பிறந்தாரை மோசம் செய்யும் உலுத்தனா நான்? எவ்வளவு இழிகுணம் இவர்களுக்கு என்று கூறினேன்—சோகித்தேன்.

இளவரசர் சிறையிலே தள்ளப்பட்டதும், மந்திரிகளும், பிரதானியரும், என்னைக் கண்டதும், விசேஷ மரியாதைகள் செய்யலாயினர். அது எனக்கு புண்ணிலே புளித்த காடியை ஊற்றுவது போலிருந்தது. என்மீது வீண் சந்தேகம் கொண்ட அவர்களையும், அவர்கள் பெரிது எனப் பேசும், அரசபதவியையும் தூசு எனக் கூறிவிட்டுத் துறவு பூண்டுவிட வேண்டும் என்றுகூட நினைத்தேன். இந்தத் தீர்மானத்தை தந்தையிடம் கூற அவரிடம் சென்றேன். ஆனால் அவருடைய விழி சிவந்திருந்ததையும், அவருடைய மொழியிலே சோகம் தோய்ந்திருந்ததையும் கண்டதும் என்னால் ஏதும் பேச முடியவில்லை.

"கடைசி முறையாக, நீ போய்க்கேள் அவனை. என்னைச் சாகடிக்கத்தான் அவன் பிறந்தானா என்று கேள். குலை தள்ளியதும் வாழையை வெட்டிவீழ்த்துவதையும், விழுந்துவிட்டால் ஆல் நிலைத்து நிற்பதையும் அவனுக்குக் கூறு. பாண்டியனை படுகளத்திலே கொல்ல முடியாது போன பகைவர்களின் பங்காளியா, பட்டத்தரசன் பரிவைப் பெரிதென எண்ணும் புதல்வனா அவன் என்பதைக் கேட்டுப்

பார்" என்று என்னிடம் கூறினார். புயலைப்போய் அடக்கு என்று கட்டளையிடுவதுபோல இருந்தது என் தந்தையின் சொல். நான் என்செய்வேன்! சரி என்று கூற எப்படி தைரியம் வரும்—முடியாது என்றும் கூற முடியுமோ! தலை அசைத்தேன். தந்தை தலையைக் கவிழ்த்துக்கொண்டார். துக்கம் அவரைத் துளைத்தது. என் செய்வார் அவர்? சிறை சென்றேன். காவல் புரிவோரை வெளியே போகச் சொல்லிவிட்டு என் அண்ணன் இருந்த அறைக்குள் நுழைந்தேன். அவர் புன்சிரிப்போடு என்னைப்பார்த்து, "தெரியும் எனக்கு. தந்தை எப்படியும் சம்மதிப்பார் என்று. அவர் சம்மதத்தை கூறத்தானே நீ வந்தாய்?" என்று கேட்டார். எனக்கு அவர் மொழியைக் கேட்ட பிறகு நடுக்கமும் பிறந்தது. இல்வளவு நம்பிக்கையும் ஆவலும் கொண்டுள்ளவருடன், என்ன பேசி, மன்னர் வழிக்கு அவரைத் திருப்புவது? நடக்கக் கூடிய காரியமா? என்ற எண்ணம் என்னைக் கோழையாக்கிவிட்டது. நான் இந்த முயற்சியைச் செய்யாதிருப்பின் முடிபெற வேண்டியே நான் சும்மா இருந்துவிட்டேன் என்ற பழிவந்து சாரும். இரு நெருப்புக்கிடையே சிக்கிய நான் எவ்வளவு தவித்தேன் தெரியுமோ! என் நிலையை ஒருவாறு யூகித்துக் கொண்டார் அண்ணன். அவருடைய புன்னகை மறைந்துவிட்டது. பொலிவு குறைந்தது. பெருமூச்சுடன் "தந்தை இசைய மறுக்கிறாரா?" என்று கேட்டார். "ஆம்" என்று நான் மெதுவாகக் கூறினேன், "சரி!" என்று கோபமாகக் கூறிவிட்டு, அவர் அங்கிருந்த மஞ்சத்திலே படுத்துக்கொண்டார். என் நெஞ்சு உலர்ந்துபோய் இருந்தது. நெஞ்சை நனைத்துக்கொள்ள, அங்கிருந்த நீர்க்குவளையைஎடுத்தேன். என் அண்ணன் "வேண்டாம்! அந்த நீரைப் பருகாதே" என்றுகூறினார். நான் பயந்துவிட்டேன். ஒரு சமயம் தற்கொலை செய்துகொள்ள நீரிலே ஏதேனும் விஷம் கலந்து தயாராக வைத்திருக்கிறாரோ. என்று திகில் பிறந்தது. அண்ணா! என்று கூவினேன். "தம்பி! பயப்படாதே அதிலே விஷமில்லை. ஆனால் அந்தக் குவளை நீரிலே என் கண்ணீர்த் துளிகள் சிந்தின. நீர் பருக அங்கு சென்றேன். என் நிலையை நினைத்தேன்; கண்ணீர் பெருகிக் குவளையிலே சிந்திற்று; நீர் கெட்டுவிட்டது" என்று அவர் கூறினார். அதைக் கேட்ட நான், எவ்வளவு பதறினேன் தெரியுமா! நடனா! நெடுநேரத்திற்குப் பிறகே, நான் அவருடன் பேச முடிந்தது. பேச்சினால் என்ன பயன் விளைய வேண்டுமோ, அது ஏற்படவில்லை. அதற்கு மாறாக என் அண்ணன் காதலையே கலையாகக் கொண்டிருப்பவர் என்று நான் கண்டுகொண்டேன். ஒரு பெரும் புலவர் பேசுவது போலிருந்ததே தவிர அவருடை பேச்சு, மைவிழியாளுக்காக வீண் பிடிவாதம் செய்யும் வீணுரையாக எனக்குத் தெரியவில்லை. அவருடைய வாதங்களும், மனோதத்துவ மொழியும், மிக அழகாக இருந்தன. தந்தையின் துக்கத்தை நான் அவருக்கு எடுத்துரைத்தேன். ஒரு பெண்ணுக்காக குடும்பம் அழிவதா என்று கேட்டேன். நான்கற்றிருந்த திறமையத்தனையையும் காட்டித்தான் நான் பேசிப்பார்த்தேன். அவ்வளவையும் அவர் சிதறடித்தார். அவர் அன்று கூறிய சில வாசகங்கள், பிறகு, பல இரவுகள் என் சிந்தனைக்கு வேலை தந்தன. அவர் அன்று கிளப்பிய பல பிரச்சினைகளுக்கு, எனக்கு இன்றளவும் விடைகிடைக்கவில்லை.

"தம்பி! அரசனின் கடமை, அரச பதவியின் பொறுப்பு நிலைமைக்கேற்ற நடவடிக்கை, என்று பல கூறினார் தந்தை. நீயுந்தான் கூறுகிறாய். அரசனாக ஒருவன் இருப்பதனால் ஒரு சாதாரண மனிதனுக்குள்ள மிகச் சாதாரணமான உரிமையையும் அரசனென்ற நிலைமைக்காக, பதவிக்காக இழந்துவிட வேண்டுமா? அறிவுடைமையா அது? அசர போகத்துக்காக, குடும்ப இன்பத்தைப் பறிகொடுக்க வேண்டுமா? அது சரியா" என்று என்னை அவர் கேட்டார் இன்றுவரை நான் அதுபற்றிச் சிந்தித்துப் பார்க்கிறேன், சரியான பதில் கிடைக்கவில்லை.

"தம்பி! பாண்டிய நாடு பெரிது. உன் பரிவுக்கேற்ற மங்கையல்ல! என்று தந்தை கோபத்தோடு கூறினார். கோபம் அவருடைய சிந்தனா சக்தியைக் கெடுத்துவிட்டது. நீ யோசித்துப் பார்! ஒரு மங்கைக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றாது அவளைப் பெற ஆண்மையில்லாது, பேடியாகித்துரோகியாகி, நான் இந்த மண்டலத்தை ஆண்டு என்ன பயன்? தந்தையின் கோபத்துக்குப் பயந்து ஒரு தையலின் மானத்தை நசுக்க நான் துணிந்துவிட்டால் நாளைக்கு ஒரு மண்டலத்து மக்களின் மானத்தைக் காப்பாற்றும் மகத்தான பொறுப்பை நான் நிறைவேற்ற முடியுமா! நீ கூறு. ஏழை எளியவர், அபலை அனாதிகள், எனும் எவரிடமும் பரிவு காட்டி, அவருடைய சுகத்திற்காகப் பணியாற்றுவது அரச பதவியின் மேன்மை என்று அறிவுரை புகல்கிறார்களே. அந்தப் பதவிக்கு நான் இலாயக்குள்ளவனாவதற்கு ஒரு மங்கையரின் மனதைப் புண்ணாக்கி, வாழ்வைப் பாழாக்குவது பயிற்சி முறையா கூறு? அவள் கண்ணீர்ப் பெருகப் பெருக, நான் பனி நீரால் குளிப்பாட்டப்பட்டு பட்டத்தரசனாவதா? அவள் கரங்களைப் பிசைந்து கொண்டு ஒரு இடத்திலே அழுது கொண்டிருப்பது. வேறோர் இடத்திலே நான் கரத்திலே செங்கோலேந்தி அரசாள்வதா! ஒருபுறத்திலே, நான் நீதியின் சின்னமாக கொலுவீற்றிருப்பது, மற்றோர் இடத்திலே ஓர் மங்கை என்னை அநீதியின் இருப்பிடமே என்று கடிந்துரைப்பதா! பாண்டிய நாட்டுக்கு, ஒரு பாவையின் வாழ்வைக் கெடுத்த பாதகனா அரசனாவது? ஒரு பெண்ணை நிர்க்கதியாக்கும் நீசனுக்கா மக்கள் நெடுந்தண்டமிடுவது? யோசித்துப்பார்" என்று அவர் அன்று சொன்னார். இதுவரை பல பெரியவர்கள் இதற்குப் பலப்படப் பதில் கூறினர். எனக்குத் திருப்தியாகவில்லை.

நடனா! அவர் எவ்வளவு கருத்துடன் பல நூற்களைப் படித்திருந்தார் என்பது, அன்று அவர் பேசியதால் நன்கு விளங்கிற்று. காதலால் தாக்குண்டவர்களின் நிலைமையைப் பற்றி அவர் கூறியவற்றிலே ஒன்றைக் கூற என் மனம் என்னைத் தூண்டுகிறது. காதலால் தாக்குண்டு காடுமேடு சுற்றிய உனக்கும் வீரமணிக்கும் அது நன்மை பயக்கும் என்றுங் கருதுகிறேன்.

ஒரு தமிழ் அணங்கின் காதலன், பொருள் தேட வேற்றூர் சென்றானாம். அப்போது, அந்தப் பெண்மணி, தன் முற்றத்திலே, முறுவலின்றி முடங்கிக் கிடந்தாள். நெடுவழி சென்றவனை நினைத்தாள். அவன் சென்ற இடமோ, நீரும் குளிர்ச்சியும் வளமையும் வசீகரமும் இல்லாத இடமாம். மழைகாணா மண்டிலத்துக்குத் தன் மணாளன் சென்றிருப்பது

தெரிந்து, வெப்பம் அவனை வாட்டுமே என்று அவள் வருந்தினளாம். வருத்தத்தோடு, அந்த வனிதை வானை நோக்கினள். வெண்மேகக் கூட்டத்தைக் கண்டாள். மேகங்களே! என் மணாளன் சென்றுள்ள மண்டிலத்துக்கு விரைந்து சென்று, மழை பொழியலாகாதா என்று கேட்டாளாம், அந்தக் காரிகை. கேட்ட பின்னர் அவளே யோசித்தாள். வெண் மேகம், மழை பொழியும் ஆற்றலற்றனவல்லவா? நீர் இல்லையே, அவற்றினிடம்! அவை எங்ஙனம் மழை தரும், என்று யோசித்தாள். அயர்ந்தாளோ? இல்லை. நீர் மொண்டு உண்டு வெண்ணிறம் மாற்றி கருமேகமாகுமின். காதலன் சென்றுள்ள இடம் சென்று மழை பொழியச் செய்து அவன் வெப்பத்தால் வாடுவதைப் போக்குமின் என்று வேண்டினள் வெண்மேகங்களை! எவ்வளவு அன்பு அவளுக்கு! காதலன் பிரிந்ததால் தனக்குற்ற கஷ்டம் மட்டுமே பெரிது என்று அவள் எண்ணவில்லை. வெப்பமிக்க இடத்திலே அவர் வருந்துவாரே என்ற நினைப்பே அவளுக்கு அதிக வருத்த முண்டாக்கிவிட்டது, விரைந்து வா! என் வேதனையைப் போக்கு! என்று மட்டுமே காதலனை வேண்டினள் என்று கூறினல், அவளுக்குத் தனியே இருந்து தவிக்க மனமில்லை. மணாளனுடன் இன்பமாக வாழ மனம் நாடுகிறது என்ற அளவே, அவளுக்கு இருந்த அன்பு என்று ஏற்படும். எந்த மங்கைக்கும் இது இயல்புதானே! சுகமாகச் சந்தோஷமாக வாழத்தானே எவரும் எண்ணுவர்; அதுபோல் இவளும் எண்ணினள். ஆனல் இந்த மங்கை தன் சுகத்தையும் சந்தோஷத்தையும் இரண்டாவதாக்கினள். வேற்றூர் சென்றுள்ள காதலனுக்கு இரண்டு கஷ்டம்; தனக்கு ஒரு கஷ்டம் என்பதனை உணர்ந்தாள்; அவனின்றித் தான் வாடுவதுபோல, அவளின்றி அவனும் வாடித்தானே கிடப்பான். ஒத்த காதல்தானே தமிழ் மரபு. எனவே பிரிவால் வரும் துயரம் இருவருக்கும் உண்டு. அதே கஷ்டத்தால் காரிகையும் வாடுகிறள், காளையும் வாடுகிறன். ஆனல் காரிகை சொந்த நாட்டில் குளிர்ச்சியுள்ள இடத்திலே இருக்கிறள்; அவனே அவளைப் பிரிந்திருக்கும் கஷ்டத்தோடு, வேறோர் கஷ்டமும் அனுபவிக்கிறன். அவன் சென்று நடமாடும் இடம் வெப்பமிக்க வெளி. ஆகவே, அவனுக்குள்ள கஷ்டம் இருவகைப்படும். இதனைத் தெரிந்ததாலேயே, அவள், மேகங்காள்! அவர் அங்கு அவதிப்படுகின்றரே, வெப்பத்தைப் போக்க மழை தாருங்கள் என்று வேண்டுகிறள். அன்பு மட்டுமா! அறிவும் ததும்புகிறது அவள் மொழியிலே! வான மண்டலத்திலே எவனே தேவன் உட்கார்ந்து கொண்டு மழையைப் பொழியச் செய்கிறன் என்று வரட்டுப் பேச்சல்ல அவள் உரைத்தது. நிலத்திலே உள்ள நீரை உண்டு கருமேகம் பின்னர் மழையாகப் பொழிவிக்கும் என்ற அறிவு மொழி பேசுகிறள் அந்த மங்கை "கடைக்குப் போய் கனி ஒரு ரூபாய்க்கும், கற்கண்டு இரண்டு ரூபாய்க்கும், சந்தனம் ஒரு வீசையும், மல்லிகைச் செண்டு ஒரு கூடையும், வாங்கிக் கொண்டு வா" என்று பணியாளுக்குக் கூறிவிட்டால் மட்டும் போதுமா? இவைகளை அவன் கடையிலே பெறக் காசு அவனுக்குத் தந்தனுப்பினல்தானே, பழமும் பிறவும் அவன் பெற்றுவருவான்! காசு தராவிட்டால், வெறுங்கையன் என்ன கொண்டுவரமுடியும்! அதுபோலவே வெண்மேகங்களே! நீரை மொண்டு உண்டு, கருமேகமாகி, மழை பொழிமின் என்று கூறிவிட்டால் போதுமா, நீர் நிலையங்களைக் காட்டவேண்டாமோ அந்த மங்கை, நீர் நிலையங்களை மட்டுமல்ல, நீர் வீழ்ச்சிகளையே வெண் மேகங்களுக்கு காட்டுகிறள். எங்கேயோ எவருக்கோ சொந்தமானவை அல்ல அவள் காட்டும் நீர்வீழ்ச்சிகள். அவளுடைய சொந்தச் சொத்து!

"வெண் மேகங்களே! இதோ பாருமின் அவர் இல்லாததால் வருந்திடும் நான், அழுதபடியிருக்கிறேன். என் கண்களிலே பொழியும் நீரை மொண்டு, உண்டு. வெண்ணிறமாறி, கருமேகமாகிப், பின்னர் வெப்பமிக்க இடத்திலே சென்றுள்ள என் மணாளன் மகிழ, அங்கு மழை பொழிமின், என்று அந்த மங்கை வேண்டிக்கொண்டாளாம். அவளுடைய அன்பு எவ்வளவு அழகு!

தம்பி! தமிழகம் இதுபோன்ற காதலகமாக இருந்தது என்று அன்று என் அண்ணன் உரைத்தார். பல நாட்களுக்குப் பிறகு, புலவரொருவர் ஏதோ ஓர் ஏட்டுச்சுருணையிலிருந்து ஏழெட்டடி பாடிக் காட்டினர். இக்கருத்துப்பட, ஒரு பாடலை. நடனு, மற்றும் பல காதற் சித்திரங்களை அவர் தீட்டினர் அன்று; என்ன அருமை தெரியுமா?

காதற் சித்திரங்களைத் தீட்டிக்கொண்டே, எவ்வளவு நேரம் வேண்டுமானலும், இருக்க என் அண்ணன் தயாராக இருந்தாரே தவிர, தவமணியைக் கைவிட ஒரு துளியும் சம்மதிக்கவில்லை. நான் குனிந்த தலையுடன், என் தந்தையிடம் சென்றேன். விஷயத்தை உணர்ந்துகொண்ட என் தந்தை "தெரிகிறது. அந்தத் தூர்த்தன் உன் சொல் கேட்க மறுத்துவிட்டான். ஆம்! போதைக் குறையாது அவனுக்கு, கள், உண்டவனையே கெடுக்கும்; காமம்,


எத்தனையோ சுழல் வட்டங்களைக் கொண்டிருக்கிறது சமுதாயம்!

எத்தனை எத்தனையோ நிகழ்ச்சிகளின்கலவையாகக் கலங்கிக்கொண்டிருக்கிறது குடும்ப வாழ்க்கை!

'காஞ்சி'யில்!

தத்துவ மேதை

T. K. சீனிவாசன் M.P.

ஜூன் முதல் வாரத்திலிருந்து

எழுதுகிறர்!

இடை யிடையேதான் இன்பம் — எழுச்சி — ஏற்றம் என்பதெல்லாம்!!

புரையோடிய சமுதாயச் சிக்கல் ஒன்றைப் பின்னணியாய்க் கொண்ட புதிய தொடர் கதை!

# வினா-விடை

தங்க, கலையரசு, கருக்குப்பேட்டை.
பழந்தமிழ் இலக்கியங்களில் பேசப்படும் காதலுக்கும், நாகரிக மேம்பாட்டிலிருக்கும் இக்காலத்துக் காதலுக்கும் வேறுபாடு உண்டா?

இலக்கியக் காதல்கள் காதல் என்ற புனிதத் தன்மையை கடவுள் தன்மைக்கு ஒப்பப் போற்றி வந்துள்ளன. மேல் தோலாலும், மேலாடை நழுவல்களாலும் ஏற்படுவன நாகரிகக் காதல்கள். எனவேதான் இலக்கியக் காதல்கள் காதல்களாகவே இருந்ததுடன், அவற்றின் முடிவுகளும் சுப முடிவுகளாக இருந்திருக்கின்றன—விதிவிலக்குகள் நீங்கலாக. ஆனால் இந்தக் காலத்துக் காதல்கள் அகத்தில் பிறவாமல் புறத்தோற்றத்திலேயே பிறப்பதனால் தற்கொலைகளும், கொலைகளும் தான் ஏற்படுத்துகின்றன! இந்தக் காலத்துக் காமத்துக்குப்போய் "காதல்" என்று பெயர் சூட்டுவதுகூட முட்டாள்தனம்தான் ஐயா!

• • •

காதலுக்கும், காமத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?

இயற்கை மரணத்துக்கும், தற்கொலையால் பெறும் சாவுக்கும் உள்ள வேறுபாடுதான்!

த. சிவசுப்பிரமணியன், மணச்சநல்லூர்.
பணம் இருந்தால் பத்தும் வரும் என்று சொல்கிறார்களே, அவை என்னென்ன?

அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய வினாதான்! பொய், சூது, வஞ்சகம், காமப் பசி, ஏமாற்றுவித்தை, மாற்றுரை மதியாமை, கர்வம், காலநிலை, அடுத்துக் கெடுத்தல், அறக்கேடு முதலான பத்துக்களுடன் "மனிதத் தன்மை" என்ற பதினொன்றாவதையும் சேர்த்துக் கொள்ளுங்கள்! ஆனால் இது எல்லாருக்கும் பொருந்தி விடுவதில்லை, சில விதி விலக்குகளும் உண்டு.


• • •

அண்ணல் காந்தி, அறிஞர் அண்ணா ஆகியோர் மாணவர்களுக்கென்று சொல்லிச் சென்றவை யாவை?

வினாவிடைப் பகுதியில் பதில் சொல்லிவிட முடியுமா? அந்த இருவரது பேச்சும், மூச்சும் நாட்

(12-ம் பக்கம் பார்க்க)

அதினினும், கொடியது அவன் அப்பேய் வயத்தானாகிவிட்டான். எனவே இனிப் பிறர் சொற்கேட்கும் பெருங்குணம் அவனிடமிராது. பாம்பும் அவனுக்கு இனிப் பழுதையாகத் தோன்றும் படுபாதாளத்திலே அவன் விழ இருப்பதைத் தடுக்க நான் எடுத்துக் கொண்ட முயற்சி பலிக்கவில்லை. என்செய்வது? ஒரு காரிகையின் கருவிழிக்காக அவன் தன் பரம்பரை வழியையும் இழக்கத் துணிந்துவிட்டான். அவன் ஒரு புன்சிரிப்புக்குப் பலியானான்! நான் அவனுடைய கண்களிலே புரளும் நீருக்குப் பலியாவதா? பாண்டிய மன்னனின் நீதி, மக்கட்கு ஒரு விதமாகவும் மகனுக்கு வேறு விதமாகவும் வரக் கூடாது. தலைமுறை தலைமுறையாக ஒளி வீசும், பாண்டியப் பண்பு, பாகு மொழிக்குப் பலியான ஒரு காளையைக் காப்பாற்றுவதற்காகக் கெட விடுவதா! இல்லை! அவன் என் மகனல்லன்! என் சட்டத்தை மீறிய சாதாரண குடிமகனே! கட்டுக்கு அடங்க மறுக்கும் அவன் மீது பகிரங்கமான குற்றச்சாட்டுத் தயாரித்து, அடுத்த வெள்ளியன்று, விசாரணை நடத்தியே தீருவேன். இதற்கான காரியங்களைச் செய்யுமாறு, மந்திரிக்குக் கூறு. இதோ பார்! இன்று முதல், நீ இளவரசர் மாளிகையை உனது இருப்பிடமாக்கிக்கொள், அம்மனைப் பணியாட்களிடம் பட்சமாக நட. இளவரச பதவிக்கேற்ற பண்புடன் வாழவேண்டும்" என்று கூறினார். இனி, என் அண்ணன் தப்பமுடியாது என்பது நிச்சயமாகிவிட்டதால், என் மனம் மிக அதிகமாக வேதனைப்பட்டது. அவர் உலவிய திருமனையிலே நான் எப்படி உலவுவேன்? அவருடைய பணியாட்களிடம் நான் எப்படிப் பேசுவேன்? அவருடைய உரிமையைப் பறித்துக் கொண்டு நான் எப்படி மக்களிடை உலவுவேன் என்றெல்லாம் எண்ணி ஏங்கினேன். ஊரார் எப்படியும் என்னைப் பழிப்பார்கள் என்று பயந்தேன். நான் ஏன் பாண்டிய மன்னனுக்கு மகனாகப் பிறந்தேன்? பழிச்சொல் ஏற்கவா? என்று துக்கித்தேன். என் அண்ணனுக்கு என்ன தண்டனை தருவார்களோ என்று திகிலடைந்தேன். ஆனால், என் அண்ணனே கவலையின்றி இச்செய்தியைக் கேட்டுக் கொண்டார். "காலதாமதமின்றி விசாரணை நடத்தி, என்னை நாடு கடத்தட்டும். அவளையும் உடனழைத்துச் செல்ல மட்டும் அனுமதி தரவேண்டும். அவளைச் சிறையிலே அடைத்துவைத்துக்கொண்டு என்னை வெளியே துரத்தினால், நான் சும்மா இரேன், பிறகு பாண்டிய நாடு என் பகைவர் நாடுதான்! எந்தக்கோட்டையிலே அந்தத் தவமணியைக் கொண்டுபோய் வைத்தாலும், நான் நுழைந்தே தீருவேன்; இது நிச்சயம்" என்றுரைத்தாராம் காவலாட்களிடம். திங்கள் போய் செவ்வாய்; பிறகு புதனும் வியாழனும் விடிந்தது, என் வேதனையும் கட்டுக்கடங்க மறுத்துக் கண்ணீராக வெளிவந்தது. வெள்ளியன்று விசாரணை நடந்தது. ஆனால் என் அண்ணன் செய்த குற்றத்தைப் பற்றிய விசாரணையல்ல, தவமணியின் பிரேத விசாரணை நடந்தது! நடனா! உனக்கு இது கேட்டதும் தூக்கிவாரிப் போட்டது போலத்தான். வெள்ளி விடிந்ததும் வேலையாட்கள் ஓடோடி வந்து, தவமணி தற்கொலை செய்துகொண்டாள் என்று செய்தி கூறியதும் நான் துடித்தேன்.



# வேதனையும் சாதனையும்

—பல்கலைக் கழகத் துணைவேந்தர் நெ. து. சுந்தரவடிவேலு—

மாந்தர் விரும்பக்கூடிய உரிமைகள் பல. அவற்றில் சில அடிப்படையானவை; மக்கள் வாழ்க்கைக்கு இன்றியமையாதன. அவை, 'மனித உரிமைச் சாசனம்' என்ற பெயரில் வெளியிடப்பட்டன. ஐக்கியநாடுகளின் அவை, இருபத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன் அவற்றை வெளியிட்டு விளம்பரப்படுத்தியது.

உரிமைகளின் உயிர்நாடியாக இருப்பது கல்வி உரிமை, கல்வி கற்க எல்லோருக்கும் உரிமை உண்டு. பிறப்போ, மொழியோ, நிறமோ, சமயமோ, அவ்வுரிமைக்குக் குறுக்கே நிற்கக் கூடாது. அதாவது மக்கள் இனம் முழுமைக்கும் கல்வி கற்கும் உரிமை வேண்டும். அதற்கான வழிவகை செய்வது, அந்தந்த நாட்டின் கடமை. நாட்டு அரசுகள், வேண்டிய வாய்ப்புகளையும் வசதிகளையும் பெருக்கவேண்டும். கொள்கையளவில் இது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஐக்கிய நாடுகளின் அமைப்பில் சேர்ந்துள்ள நாடுகளால் ஒப்புக்கொள்ளப் பட்டது செயல் முறைக்கு வந்ததா? இல்லை. இல்லை. பல நாடுகளில் இல்லை. பிற நாடுகள் கிடக்கட்டும், நம் நாட்டின் நிலை என்ன? குற்றவாளிகளின் முன் வரிசையில் நமக்கு இடமுண்டு. முன் வரிசை மட்டுமென்ன, முதலிடமே பொருத்தமாகலாம் ஏன்?

பெரும் கொட்டு முழக்கோடு, நமக்கு நாமே அரசியல் அமைப்புச் சட்டம் அமைத்துக்கொண்டோம். பெருமைக்குரியதே, அதை யாரும் அவமானப்படுத்தாத படி தனியொரு சட்டம் செய்து அதன் மானத்தைக் காக்கவும் ஏற்பாடு செய்துவிட்டோம். போதாதா? அப்புறம் அமைதியாக உறங்கலாமல்லவா? அதுவே நாம் செய்து வருவது,

இந்திய மக்களின் இலட்சியத்தை, பல உருவங்களில் வடித்துள்ளார்கள், நம் அரசியல் அமைப்புச் சட்டத்தில். அவற்றில் ஒன்று இதோ!

பதினான்கு வயது வரையில், எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் இலவச கட்டாயக் கல்வியை மாநில அரசுகள் ஏற்பாடு செய்யவேண்டும் என்பது, அரசியல் அமைப்புச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 'நெறிக்கொள்கை'களில் ஒன்று, 'அதற்கென்ன? மெல்ல செய்வோம்? என்று இருந்து விடலாமல்லவா? கால தாமதத்தைத் தடுக்கவும் நெறிக்குறிப்பு உள்ளது அச் சட்டத்தில், எல்லோர்க்கும் இலவசக் கட்டாயக் கல்வி ஏற்பாடு செய்வதற்கும் காலவரையை முடிவு செய்தார்கள், அரசியல் அமைப்பாளர்கள். அச்சட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டிற்குள் இக்கல்வி உரிமையினை வழங்க வேண்டும். அதுவே அரசியல் நெறி ஆண்டுகளோ ஓடிவிட்டன; பத்து அல்ல; மேலும் ஓடி விட்டன. இருபதும்முடிந்துவிடும் விரைவில். எவ்வளவு நெருங்கியிருக்கிறோம் இலட்சியத்தை? எப்போது அடைவோம் அதை?

இந்தியாவின் பல மாநிலங்கள் பாதி தூரத்தில் உள்ளன. ஆயிரத்துத்தொள்ளாயிரத்து எண்பத்தைந்தில் கூட எல்லோரும் பள்ளிக்குப் போகும் நிலை எட்டாது. இது என் மதிப்பீடல்ல. இந்தியப் பேரரசின் முடிவு, அண்மையில் நாடாளு மன்றத்தில் வெளியான முடிவு. வேதனைக்குரிய முடிவு உயர் மட்டக்குழு வொன்று ஆராயப்போகிற அவல நிலை.

உங்களுக்குத் தெரியுமா? கல்கத்தா மாநகராட்சி எல்லைக்குள் மாநகராட்சி பள்ளிகளில்கூட, இன்னும் எல்லோர்க்கும் இலவசக் கல்வி என்ற நிலை ஏற்பட வில்லை. நாம் விடுதலை பெற்றோம். கால் நூற்றாண்டை நெருங்கப் போகிறோம் இலவசக் கல்வி ஏற்பாடோ அதுவரை அங்கு காணோம். பணம் செலவாகாமலா இருந்தது இதுவரை? கல்விக்குப் பணம் செலவாகாமலா இருந்தது இதுவரை? இந்திய அரசே, பல ஆயிரம் கோடி ரூபாய்களை கல்விக் கடலில் கொட்டியுள்ளதே, இன்னமும் கல்கத்தாவிலும், மேற்கு வங்காளத்தில் உள்ள பிற நகரங்களிலும் தொடக்கக் கல்விக்கே சம் பளம் கட்ட வேண்டியிருக்கிறதே! அடித்தளத்தை அலட்சியப்படுத்திவிட்டு, பகட்டான மாளிகை கட்டலாமா? தொடக்க நிலைக் கல்வியைக்கூட எல்லோர்க்கும் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யாமல், சிலருக்கான பல்கலைக் கழகக் கல்விக்கு தங்கக் கலசம் வைப்பதில் எவ்வளவு காலம் கழிக்கப் போகிறோம்? எவ்வளவு பணத்தைக் கொட்டப் போகிறோம்?

பல்கலைக் கழகக் கல்வி வேண்டாமென்பதாகப் பொருள் கொள்ள வேண்டாம். கல்வி வளர்ச்சி என்ற பெயரில் வெளிச்சம் போடும் கல்வி நிலையங்களையும், குளுகுளு வசதிகளையும், பின்னர் எப்போதோ வர வேண்டிய அமைப்புகளையும், முன்னதாக, ஏற்படுத்த பணத்தை வாரியிறைத்தது, நல்லதல்ல. பொறுத்து வளர்க்கவேண்டிய கல்விப் பகுதிகளுக்கு விரைந்து செலவு செய்து விட்டதால், நம் நாட்டின் நிலையைக் கருதாமல் பிற நாட்டு பாணியில் அமைக்க முயன்றதால், தொடக்கக் கல்வி தேங்கிப் போயிற்று, பத்தாண்டில் நிறைவேற்றியிருக்க வேண்டிய திட்டத்தை நாற்பது ஆண்டுகளுக்குப் பிறகும் முடியாது என்று வெளியிட வேண்டியதாகிறது. இத் தவறு இனியும் தொடரக்கூடாது, எல்லோர்க்கும் தொடக்கக் கல்வி என்பதை உறுதியாக்கிவிட்ட பிறகு பிறமட்டக் கல்விப் பகுதிகளை வளர்க்க முனைய வேண்டும்.

அடித்தளத்திற்கேற்ற படியே மாடிகளின் எண்ணிக்கையும் அமைப்பும் அமைய முடியும். கல்வியின் அடிக்தளமான தொடக்கக் கல்வியை புறக்கணித்து விட்டு, உயர் கல்வியை வளர்த்துக்கொண்டே இருந்து விட்டதால், இளைய தலைமுறையில் கூட மூவரில் ஒருவர் எழுத்தறிவின்றி வளர்ந்து விடுகிறார். கடைக்கால் வலிவின்மையால் கட்டடம் இடிந்து விழுவது போல், நம் கல்விக் கட்டடம் இடிந்து வருகிறது

முதலில் கவனிக்க வேண்டியதை, முதலில் கவனிக்க வேண்டும். தொடக்கக் கல்வி எல்லோர்க்கும் கிடைக்கும்படி செய்துவிட்டே, அடுத்த நிலைக் கல்வி வளர்ச்சியில் முனைய வேண்டும் நடுநிலைக் கல்வியை எல்லோர்க்கும் ஏற்பாடு செய்துவிட்ட பின்னர், உயர் பள்ளிக் கல்வியைப் பெருக்க வேண்டும், அதற்குப் பிறகே, கல்லூரிக் கல்வியை பெருக்குவது பொருத்த

மாகும். இதையே தமிழ் நாடு செய்தது. இந்தியப் பேரரசின் இழப்புகளுக்கு ஆளாகாமல் செய்தது. எனவே 11 வயதுக் குட்பட்டவர்களில நூற்றுக்குத் தொண்ணூறு பேராவது பள்ளிக்குச் செல்லும் நிலை தமிழ் நாட்டில் உருவாகியது. நூற்றுக்கு நூறு பேரும் பள்ளி செல்லும்படி செய்யவேண்டும். நடுநிலைப் பள்ளி வயதினரும் விரைவில் அந்நிலையை அடைய முயல வேண்டும். இதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். கை கொடுக்க வேண்டும். ஏன்? ஐந்து வகுப்புக் கல்வி போதாத கல்வி. எட்டு வகுப்புக் கல்வியும் எதிர் காலத் தேவைக்குப் போதாது. எனவே பள்ளியிறுதிப் படிப்பிற்கு எல்லோரும் செல்லும் காலத்தை விரைவு படுத்த வேண்டும்.

“வறுமையினால் ஒரு தமிழன் கற்கவில்லை யென்றால் இங்குள்ள எல்லோரும் நாண வேண்டும், இது நம் புரட்சிக் கவியின் கட்டளை. ஆம். நாணுவோம்; அதோடு நில்லோம். நாணத்தை ஆக்கப் பணிகளாக மாற்றுவோம். கல்விக்குத் துணையாக உணவளிக்க உதவுவீர், உடை கொடுக்க உதவுவீர். தளவாடங்கள் கொடுக்க முனைவீர். துணைக்கருவிகள் தந்து கல்வியை வளர்ப்பீர்,

கல்வி கொடுத்துவிட்டால் போதாது. அது வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். ஏட்டுச் சுரைக் காய் கறிக்குதவாது. வெறும் ஏட்டுப் படிப்பால் பயனில்லை, பள்ளி மாணவர்களுக்கு கைவேலைப் பயிற்சியும் தொழிற் பயிற்சியும் தேவை, பாடத் திட்டத்தில் இவற்றிற்கு ஏற்பாடு செய்துவிட்டால் போதாது. மெய்யாகவும் நன்றாகவும் நடக்க வேண்டும். சிற்றூர் பள்ளிகள் தோறும் காய்கறித் தோட்டம் வைக்க வேண்டும், மாணவ மாணவிகள் அதில் உழைக்க வேண்டும். காய்கறிகளை விளைவிக்க வேண்டும். நகரங்களில்கூட பல பள்ளிகளில் இது முடியும். உழைக்காத கை, உதவாத கை, வளர்க்காத கை, வளமற்ற கை. கைகளைப் பயன்படுத்த வேண்டும். வாழ்க்கைத் தேவைகளைப் பயிரிடப் பயன்படுத்த வேண்டும், உயர் நிலை வகுப்புகளில், மாணவர்களது சீருடையை தைக்கும் பணியை, குறிப்புப் புத்தகங்களை ஆயத்தஞ் செய்து விற்கும் பணியையும் ஏற்பாடு செய்யலாம். இவ்விதம் பல பணிகளைச் செய்யலாம், படிப்பும் உழைப்பும் விலகி நிற்கும் நிலை விரைவில் மாறவேண்டும். அதற்கான ஈடுபாடுகளை, பயிற்சிகளை அலட்சியப்படுத்தல் ஆகாது. நம் சிந்தனை இவ்வழி செல்லட்டும் முயற்சி முனையட்டும். தொழிலும் கல்வியும் கைகோர்த்து நடக்கட்டும். அப்போது, தமிழனென்று சொல்லி, தலை நிமிர்ந்து நடப்போம்,

★


நாட்டுக்குப் பெருந்தொண்டு கணக்காய் வாழ்தல்
கேட்டுக்கே துணை செய்யும் அதிகக் கூட்டம்
திட்டமற்ற குடும்பத்தால் நேர்ந்துவரும் பொல்லாங்கு
ஒன்று இரண்டா உரைத்திடவே முடியாது
ஓரிரண்டு பிள்ளைகளை உருவாகப் பெற்றெடுத்து
பாரினில் பெருந்தொண்டாம் குடும்பநலம் போற்றிடுவோம்

அருகிலுள்ள அரசினர் மருத்துவமனை — ஆரம்ப சுகாதார நிலையம் — குடும்பநலத் திட்ட நிலையம் ஒன்றை அணுகி தேவையான தகவல்களைத் தெரிந்து செயல்படுங்கள்.

வெளியீடு:
சுகாதாரம்-குடும்பநலத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-6.

# கம்பன் விழாவா? காங்கிரசு விளம்பரமா?

"பொடியன்"

அண்மையில் புதுவை மாநகரில் வழக்கம்போல் சிறப்புறக் கொண்டாடப் பெற்ற கம்பன் விழாக் காட்சிகளைக் கண்டோர் வியப் படைவர்!! கேட்டோரோ, இது கம்பன் விழாவா? அல்லது காங் கிரசுக்கட்சியின் விளம்பரவேலையா? தி. மு. கழகத்தையும், தி. மு. கழக அரசையும், தந்தை பெரியாரையும் திட்டித் தீர்ப்பதற்கே ஏற்பாடு செய்யப்பட்ட திருவிழாவா? என்று கேட்பர்.

உண்மையும் அதுதான்!!

இருபதாம் நூற்றாண்டின் இணை யற்ற பாவலன், பாட்டு வேந்தன், கவிதை மாமன்னன் பாரதிதாசனைப் பெற்றெடுத்த பெருமைக்குரிய புதுவை மாநகர். அவனுடைய பெயரால் விழாவினைக் கொண்டாட மறந்ததேன் என்ற நியாயமான கேள்விக்கே விடைகிடைக்காத போது, மேற்கண்ட வினாவிற்கு விடை கிடைப்பதேது?

என்றாலும், உண்மையை நாடறிந்துகொண்டு கம்பனடிப் பொடிகளின் வேடத்தை உணர்ந்து கொள்ளவேண்டும் என்ற நோக் கிலே தான் சில நிகழ்ச்சிகளைத் தொகுத்தளிக்க வேண்டிய நெருக் கடி உருவாகியது.

கம்பனின் காவியச்சுவை வெள்ள மாகப் பாய்ந்தது, இராமனின் தெய் வீகப் பெருமை கடலாகப் பொங்கி யது. தமிழின் பெருமையென்னும் சிறிய வாய்க்காலும் அங்கு ஓடியது.

மதிப்பிற்குரிய ம. பொ. சி. அவர் கள் மட்டில் விழாவில் இல்லையென் ருல் தமிழ்உணர்ச்சிக்குரலை அங்குக் கேட்பதற்கே வாய்ப்பில்லை.

அந்த அளவிற்குக் கம்பன் விழா வில் தமிழ் உணர்வு பங்கேற்றது.

பட்டிமன்றம் கைகொட்டி மன்ற மாக, திட்டிக் கொள்ளும் திடலாகக் காட்சியளித்தது.

சும்மா சொல்லக்கூடாது...

மக்கள், சிரிப்பாகச் சிரித்தார்கள்!!

போகட்டும்...! இதைப்பற்றியும் நமக்குக் கவலையில்லை.

ஆனால்,

நடந்த இரண்டுநாள் விழாவில் நடைபெற்ற அரசியல் வியாபாரம் ஏன் என்பதுதான் நல்லவர்களின் கேள்வி.

முதல் நாள் விழாவில், நெய் வேலி புகழ்—'அடி'யார் ஒருவர் கலந்துகொண்டார்

அந்தக் காலட்சேபக் கலைஞர் கம்பனைப் பாராட்டினார்; இராமனைக் காட்டினார்; இடையிடையே என்ன வலியோ தெரியவில்லை. தி. மு. கழகத்தவர்களைத் திட்ட மறக்க வில்லை. அவர் பேச்சு முழுவதும் அண்ணன், தம்பி என்ற சொல் வரும் போதெல்லாம், 'அண்ணு' தம்பிகள் என்று சிலேடையாகச் சொல்லி கழகத்தைக் கிண்டினார். அவர் எதையும் கிண்டுவார்; இடந் தெரியாமல் கிண்டினாரே என்பது தான் வருத்தத்திற்குரியது.

"ஆகா, என்னமா, பசங்களை வாங்கு வாங்கு வாங்குன்னு 'வாரி' ஞர்டா" என்று சிலது'கள மகிழ்ச்சி யடைந்ததைக் கண்டு, கேட்டவர் களுக்குத்தான், நெய்வேலி 'அடி' யாரின் சொல்லாற்றலைப் புரிந்து கொள்ள முடியும்!!

காலட்சேப சோலைக்குள் சுவை காணும் 'அடி'யார் அரசியல் காட் டிற்குள் புகும் நகைச்சுவை நரியாக இருக்கவேண்டாம் என்பதே நமது வேண்டுகோள். ஆண்டவனின் புகழ் பாடி 'ஆனந்தவாரி'யினைக் காண்ப வர்க்கு அரசியல் நாட்டம் இருக் குமேயானால், வேடத்தை மாற்றக் கொண்டு வெளியே வரட்டும்!!

அடுத்த நாள் விழாவில், 'கோவைக் கம்பர்' தன் கட்சியின் கோடரியைப் பறக்கவிட்டார். தொடக்கம் முதல் இறுதிவரை கம்பன் மேடையைக் கட்சிக் கொடி யால் மூடி ஒப்பாரியும் வைத்தார்.

நெஞ்சங் 'கருத்த' அவர், இடந் தெரியாமல் ஏன் அப்படி 'இருமி' ஞர் என்று சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால், அவருக்குப் பிடித்திருக்கும் தோல்வி யென்னும் எலும்புருக்கி நோயை அறிந்தவர் களுக்கு, அது சாதாரணமாகவே இருக்கும்.

தந்தை பெரியாரின் பெயரைத் தன் வாயால் சொல்லக்கூடாது என்று தொடங்கிய அவர் பேச்சு முழுக்க முழுக்க தி. மு. கழகத்தை யும், அரசையும், திட்டியே முடிந்தது.

எப்படியும் கம்பரையாவது காங் கிரசுக் கட்சியின் உறுப்பினராக்கி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு வந்தவர்போல் இருந்தது அவர் பேச்சு

அதில் அவர் வெற்றிபெற்ருர் என்றே சொல்லவேண்டும்.

"கம்பன் பெயரால் நாங்கள் கூட் டத்தைக் கூட்டுகிறோம்; நீங்கள் காங்கிரசுக்கு விளம்பரம் செய்யுங் கள்; கழகத்தை ஒரு பிடி பிடியுங் கள்" என்று ஏற்பாடு செய்த விழா வாக இருந்தது என்ருல் அதை மறுக்க எவரும் வரமாட்டார்கள்.

மறுப்புரைக்க வருபவர்களாக இருந்தால், விழாவின் இறுதியிலா வது, தொடர்புடையவர்கள், வருத் தம் தெரிவித்திருக்கவேண்டும்,

தி. மு. கழக அரசின் புதுவை முதல்வர், அளித்த விருந்து உடனே செரித்திருக்காவிட்டால், ஒருவேளை இதைச் செய்திருப்பார்கள். கழக உறுப்பினர்களை மிகுதியாகக் கொண்ட புதுவை நகர மன்றத் தினர் தந்த வரவேற்புக்கூட நினை வில் இல்லைபோலும்.

கழகத்தினரின் இந்த கண்ணி யத்தை முன்னிட்டாவது இடந் தெரியாமல் வித்தை காட்டியவர் களைக் கண்டித்திருக்க வேண்டும்,

'இந்தப் பசங்களையெல்லாம் எதிரில் வைத்துக் கொண்டே செமையடி கொடுத்தாரே' என்று குதித்தவர்களைக் கண்டாவது பொறுப்பாளர்கள், இனி இவ்வாறு நடக்காது என்று உறுதி கூறியிருக்க வேண்டும்.

என்ன செய்வது...?

கேழ்வரகில் நெய்வடிவதேது?

விழாவின் இறுதியில் காந்தியார் நெறி பற்றியெல்லாம் பேசி, தந்தை பெரியாரையும் தாக்கிய திரு. சா. கணேசன் அவர்கள், போராட்டம், சிலை உடைப்பு புரட்சி என்றெல் லாம் முழக்கினாரே தவிர, அவரும் கம்பனைக் காங்கிரசாக்கிய கயமை யைக் கண்டிக்க மறந்துவிட்டார்.

கம்பன் விழாநாடெங்கும் நடத்தப் பெறட்டும்! இராமன் தெய்வீகம் வளர்க்கட்டும். முடிந்தால் 'அப் போலோ'வில் ஏறி நிலவிற்குச் சென்றுகூட விழாநடத்தட்டும்.

நாடு நல்லதை ஏற்கட்டும்!!

ஆனால்,

இனிமேலாவது கம்பர் விழாக்கள் காங்கிரசு விழாவாக மாருமல் இருக் கட்டும். அதுதான் கம்பனுக்கே நல்லது!!

தொடர்புடையவர்கள் இனிமே லாவது சிந்திப்பார்களாக!!

★

## மிஸ்டர் அப்பெல்லோ:

# முழுசா நம்பலே தெரியுமோ?

— சிபேபொம் —

மலர் மாலைகளின் மலைகளுக் கிடையே சிக்கி மூச்சுத் திணறிக் கொண்டிருந்த காமராசர் சுற்றிலும் கதராடைகள் சூழ்ந்திருக்க, யாரோ ஒருவர் மட்டும் கோட்டும், சூட்டுமாக நிற்பது கண்டு கண்களை அகலத் திறந்து, ஒரு பார்வையை வீசியது தான் தாமதம், கண்ணை ஏதோ ஒன்று உறுத்தியது போலிருந்தது. மறபடியும் கண்களை மூடித் திறந்துவிட்டு, உள்ளூர ஒருவித பயத்துடன், இந்தப் பஃவி இன்றைக்கே இங்கு வரவேண்டுமா? என்னென்ன கேள்விகளால் துளைப்பானோ, எந்தெந்த இரகசியங்களையெல்லாம் வாயிலிருந்து பிடுங்கி எடுப்பானோ என்பன போன்ற எண்ணங்களை அசை போடத் தொடங்கினர்.

மிஸ்டர் அப்பெல்லோவுக்கு இருக்கும் திறமைகளிலேயே, தலை சிறந்து என்று அவராலேயே பாராட்டிக் கொள்ளப்படுவது, அவருக்கிருக்கும் எக்ஸ்ரே கண்கள் தான் என்பது பிரசித்தம்! காமராசரது மருட்சியைக் கண்டு, அவரது இதயத் திரையில் ஓடிக்கொண்டிருக்கும் காட்சிகளை ரசித்தபடியே "பயப்படாதீங்க தலைவரே! நான் உங்க தலையையோ, தலைமையையோ யாரும் பிடுங்கிக்கிற மாதிரியா எதுவும் நடக்க இடங் கொடுத்திட மாட்டேன்" என்றுர். கொஞ்சம் தெம்பு வந்து விட்டிருக்க வேண்டும் காமராசருக்கு. முகத்திலும் அது பிரதிபலித்திருக்க வேண்டும்! "சந்தோஷமா இருக்கீங்க! குளச்சல் வெற்றி. உங்கள் கொள்கைக்கு வெற்றி! பழைய காங்கிரசின் பாரம்பரியத்துக்கு வெற்றி!" என்றுர் மிஸ்டர் அப்பெல்லோ, வினயமாக!

"கொஞ்சம் பாடு பட்டிருக்கேனு என்ன? போகாத கிராமம் இல்லே, சுத்தாத தெரு இல்லே; ஏருத வீடு இல்லே!" என்றுர் காமராசர் பெருமிதம் தோன்ற! காமராசரது வாய் திறந்துவிட்டது என்ற மகிழ்வில் நிருபர், "வீடு ஏறிக் கேட்டதுக்கு நல்ல பலன்தான்! நெறையக் கெடைச்சி இருக்கே!" என்றுர், "கிடைக்காமே எப்படிய்யா போகும்! காளை மாட்டுச் சின்னம் மட்டும் கெடைச்சி இருந்தா, கூட இருந்த அத்தனைப் பசங்களுடைய டெபாசிட்டைக்கூட பறிசசி இருப்பேன்யா! இந்த ஒரு காரணத்தை எடுத்துக் காட்டியே ஒரு கை பார்த்துடமாட்டேனு! பார்க்கத்தானே போறீர்?" என்றுர் காமராசர்! "பார்லிமெண்டிலே, நீங்க ஒரு மெம்பர் தானே?' என்ற ஒரு வினவைத் தூக்கிப் போட்டார் மிஸ்டர் அப்பபலலோ, அது கேட்டுக் காமராசருக்குத் தூக்கிவாரிப் போட்டது! சற்றும் எதிர்பாராவிதத்தில் இதைப் போன்ற ஒரு கேள்வியைக் கேட்டால் யார்தான திணறிப் போகமாட்டார்கள்! இடுக்கிக் கேள்விகளுக்குப் பதில் சொல்லிப் பழககப் பட்டவரும் அல்லவே அவர்! "ஆமாம்! நான் ஒரு எம் பி. தான், உங்களுக்குத் தெரியாதா?" என்ற பதில் வினவின் மூலம் சமாளிக்க நினைத்தார், நிருபர் ஏமாந்துவிடுவார் என்று எதிர்பார்க்க முடியுமா? "கேள்விப்பட்டிருக்கேன! ஆனு நீங்க எம், பி. யான நாள்லே இருந்து ஒரு தடவைக்கூட பார்லிமெண்டிலே பேசவே இல்லைன்னு கூட கேள்விப்பட்டிருக்கேன்!" என்றுர் அப்பெல்லோ!

"பேச்சு எதுக்குய்யா பேசணும்! ஒரு எம். பி. ங்கிற தகுதியை வச்சுக்கிட்டு, பேசவேண்டியவுங்கக்கிட்டே பேசினு. செய்யவேண்டியதைச் செஞ்சா போதாதோ?" என்றுர் தலைவர்! "அதுபோதும் தலைவரே! ஆனு, இப்பக் காளைமாட்டுச் சின்னம் கெடைக்காததைவச்சு, எதை எதையோ செய்திடமாட்டேனுன்னு கேட்டிங்களே அதுக்காகக் கேட்டேன்!" என்றுர் அப்பெல்லோ! "ஆமாம்யா! செய்யத்தான் போறேன்! நீரே பாருமே!" என்றுர் தலைவர்! "ஒரு வார்த்தையாவது இந்த சின்னம் பற்றி நீங்க—யாரு? காமராசருன்னு சொல்லற நீங்க—பார்லிமெண்டிலே பேசவே இல்லியேன்னு எனக்குக் கவலை. நீங்க பேசவேண்டிய இடம் அதுதானே?" என்றுர் நிருபர். "வேண்டியதில்லையா! கோர்ட் அது விஷயமா பேசிக்கிட்டிருக்கு; அது போதும்! 1972 வரட்டும்! அப்பபாருங்க!" என்றுர் பெருந்தலைவர். "1972லே நீங்க எதைப் பற்றிப் பேசணுமகிறதைத்தான் இந்தக் குளச்சல் தொகுதி உங்களுக்குச் சொல்லிக் குடுத்துட்டுதே" என்றுர் செய்தியாளர்.

"வாஸ்தவம்தான்! 1972லே இந்த மகாஜனங்கள் எல்லாம் என்ன செய்வாங்க; யாருக்குஓட்டுப் போடுவாங்கன்னு கணிக்கிறதுக்கு இது ஒரு எக்சாம்பிள்யா! எக்சாம்பிள்!" என்றுர் காமராசர். "அப்படிங்களா! கொஞ்சநாள் முன்னே ரெண்டு தீனு மூனு காணுங்க ஜெயிச்சாங்களே. அது...?" என்றுர் நிருபர். "அது அப்போய்யா! இப்ப யாரு ஜெயிச்சு இருக்கா? இதுதான் முக்கியம். என்கட்சி ஜெயிச்சு இருக்குய்யா! தெரியுதா...நீங்க சொல்லுவிங்களே, சிண்டிகேடுன்னு, அந்த கேடு ஜெயிச்சி இருக்கு. தெரியுதா" என்றுர் காமராசர்! "ஓ உலக அதிசயம் தான் உங்க கட்சியும்கூட தேர்தல்லே ஜெயிச்சதுன்னு சொல்லுறிங்களா? சரி, சரி, அப்போ, ஒரு பை எலெக்ஷனிலே ஜெயிச்சதே உலக அதிசயம்தான்னு நீங்க நெனைக்கிறப்போ, 1972லே, ஆட்சியையே பிடிக்கிறஅளவுக்கு ஜெயிக்க முடியுமோ" என்றுர் அப்பெல்லோ.

'மிஸ்டர் அப்போல்லோ' பகுதியில் காணப்படும் கருத்துக்கள் எவரையும் புண்படுத்தும் நோக்கத்தோடு, அல்லது குறை காணும் நோக்கத்தோடு, தரப்படுவன அல்ல! இப்படியும் சில நகைச்சுவைகளைத் தரமுடியும் என்பது தான்!

''யோவ் பத்திரிகை! யாருகிட்டே நின்னு இதைக் கேட்குறே? ஜாக்கிறதை! தலை காணாப்போயிடும்!'' என்று கூறிவிட்டு நிமிர்ந்தார் தலைவர்! தலையைக் கொடுக்க அங்கே, மிஸ்டர் அப்பெல்லோ இருந்தால் தானே!

"வரணும், வரணும்! நீங்க வருவீங்கன்னு நான் வெகுநேரமா எதிர்பார்த்துக்கிட்டிருக்கேன்! ஏன், இந்த பங்ஷனையே மறந்துட்டீங்களா? இல்லே...'' என்று எழுந்து நின்று கரங்கூப்பி வரவேற்றார் குளச்சல் தொகுதியில் வெற்றி கண்ட வேட்பாளர் பாலையா! "அப்படி உங்க பங்ஷனை மறந்துட முடியுமா? தப்பா, நெனைக்கப்படாது! உங்க எதிரி நெம்பர் ஒன்னுன்னு இருக்கிற இண்டிகேடு காங்கரசையே முழுசாக முறியடிச்சி ஜெயிச்சு வந்திருக்கீங்க! சுதந்திராவையும், அவங்களை ஆதரிச்ச தீனா மூனா கானாவையும்கூட வீழ்த்தி இருக்கீங்க!'' என்றார் மிஸ்டர் அப்பெல்லோ!

பல்லெல்லாம் வெளியே தெரிய, பாதாதிகேசம் வரை உடல் மகிழ்ச்சியால் சிலிர்க்க வானுயரம் உயர்ந்து நின்ற பாலையாவுக்கு என்ன பேசுவது என்பது புரியவில்லை. ஏதாவது பேசவேண்டுமே! பேசத்தான் செய்தார்'' நான் சாதாரணமா இந்த எலெக்ஷனை நினைக்கலே! ஜனநாயகச் சோதனைன்னு நினைக்கிறேன்! பாருங்க! செத்துப் போனாரே, சிதம்பர நாடார்! அவர் காங்கிரசிலே இருந்து ஜெயிச்சாலும் கடைசிக் காலத்திலே ஒன்னும் நம்பர் எதிரியாயிட்டாரு! அதாவது இண்டிகேடிலே சேர்ந்துட்டாரு! அதனாலே இந்தத் தொகுதி இண்டிகேடா? சிண்டிகேடான்னு புரிய வைக்கனும்ன்னு படாதபாடு பட்டேன்! பாழான பணத்துக்குக் கணக்கு சொன்னா, அந்த இண்டிகேடு காங்கிரசுக்காரன் அதை வைச்சே கேஸ் போட்டுடுவான்!

"கேஸ் வரும்ன்னு நீங்க இப்பவே எதிர்பார்க்கிறீங்களா? என்ன?'' என்றார் நிருபர். "இல்லே இல்லே! இவ்வளவுபெரிய மெஜாரிட்டியிலே ஜெயிச்சு இருக்கும்போது அப்படியெல்லாம் எதுவும் நடந்துடாது. செலவு கணக்கைச் சொல்லப்படாதுன்னு சொன்னேன்! எலெக்ஷன் முடிவு இப்ப இந்தத் தொகுதி சிண்டிகேடுக்குத்தான்னு எடுத்துக் காட்டுது; அது போதும் இப்போதைக்கு!'' என்றார் வெற்றி பெற்ற வேட்பாளர்! "சரி இதைப்பற்றி உங்க கருத்து என்னன்னு சொல்லுங்களேன்!'' என்றார் அப்பெல்லோ "சொல்ல என்ன இருக்கு! சீட்டுக் கெடைக்க காமராசர் பெரும் உதவியா இருந்தார்; அதனாலே அவருக்கு இது வெற்றிதான்! அதோடெ ஜனநாயகத்தின் பேராலே நடந்த எலெக்ஷன் இது; அதனாலே ஜனநாயகத்துக்கும் வெற்றிதான்!'' என்றார்.

"இதைத் தவிர நீங்க உங்க தொகுதி மக்களுக்கு என்னவாவது சொல்லுறீங்களா?'' என்றார் அப்பெல்லோ! "அதெல்லாம் சொல்ல வேண்டியதையும் செய்யவேண்டியதையும் எலெக்ஷனுக்கு முன்னாலேயே முடிச்சாச்சு! இப்போ எதுக்கு அதைப்பற்றி நெனைக்கனும்?'' என்றார் பாலையா! 'சரி, சரி! வாக்காளர்க்கு நன்றின்னு எழுதிக்கிறேன்!'' என்றார் நிருபர். நான் சொல்லாட்டியும் பத்திரிகையிலே அது வந்துடும்ன்னு எனக்குத் தெரியும்; அதுனாலே நான் வேற அப்படிச் சொல்ல வேண்டியதில்லையே!'' என்று சிரித்துக்கொண்டார்! "வேண்டாம்! வேண்டாம்! பத்திரிக்கைக்காரவுங்க அதைக் கவனிச்சுக்குவாங்க! எப்போ, பதவிப் பிரமாணம் எடுத்துக்கப் போறீங்க?'' என்று கேட்டார் நிருபர். 'அதைப்பற்றித் தலைவர் கிட்டேதான் கேட்கனும்'' என்றார் வேட்பாளர் — கம் — வெற்றியாளர். "எந்தத் தலைவர்கிட்டே? தமிழ் நாட்டுத் தலைவரா? வடநாட்டுத் தலைவரா?'' என்றார் அப்பாலோ! "நீங்க ரொம்ப பயங்கரமானவரா தெரியுதே! இதுக்கெல்லாம்போய் வடக்கு—தெற்குன்னு பேசலாமா? என்றார் சுடச்சுட. அந்த காரம் குறையாமல் மிஸ்டர் அப்பெல்லோவும் "நீங்க புதுசா கட்சிக்கு வரலேன்னு தெரியும் இருந்தாலும் உங்க சிண்டிகேடு கட்சி முழுதும் முழுமனதோட காமராசரை நம்பலே தெரியுமில்லே!'' என்று கேட்டுவிட்டுத் திரும்பினார். வாசல் காலியாக இருந்தது! "நீங்க சொல்றது ...நீங்க...'' வெற்றியாளரின் வார்த்தைகள் முடியவில்லை. கரும் புகையைக் கக்கிக்கொண்டு காற்றில் கலந்துவிட்டார் நிருபர்.

★

7 ம் பக்கத் தொடர்ச்சி

டின் அத்தனைப் பகுதி மக்களுக்காகவும் இருந்தவைதானே!

சு. இளங்கோவன், சென்னை.

பள்ளி ஆசிரியர்களிடை 'காங்கிரஸ்'காரர்கள் யாருமில்லையா?

இந்தியத் துணைக்கண்டத்தில் இருக்கின்ற அத்தனைப் பேரும் 'காங்கிரஸ்'காரர்களாகவே இருந்தால்கூட, அந்த நிறுவனத்தின் பசி அடங்காது என்கிறபோது, ஆசிரியர் பகுதிகளில் மட்டும் இல்லாதிருக்க நினைக்குமா?

வே. கண்ணன், கோவை.

ஜனசங்கம் ஒரு வகுப்புவாத இயக்கமா?

அப்படித்தான் அதை முழுதும் அறிந்தவர்கள் சொல்கிறார்கள்!

கமலநாதன், காரைக்கால்.

உரிமைகளை விட்டுக்கொடுத்தால் தான் வாழ்வு என்றால்?.....

அந்த மானங்கெட்ட வாழ்வு வாழ்வதைவிட, வீடு வீடாகப்போய் கையேந்திப் பிழைக்கலாம்!

• • •

காலம் பொல்லாதது என்பதை எதைக்கொண்டு கூறமுடியும்?

காமராசரைக் கண்டு தெளிவுங்கள்!

சி. தெட்சணாமூர்த்தி. காஞ்சிபுரம்.

இலக்கியப் பயிற்சியால் இதயம் திருந்துமா?

கல்வி கற்பதால் அறிவு கிடைக்குமா என்று கேட்கிறீர்களா?

கு. தென்னன். புதுச்சேரி.

தமிழகத்தில் மதுவிலக்குத் திட்டம் தோல்வி கண்டிருக்கிறதென்பதை ஒப்புக் கொள்கிறீர்களா?

நீங்கள் பாண்டிச்சேரியி விருந்து கொண்டு இவ்வினாவைக் கேட்பதால், மறுக்கிறேன்!

ஜி. ராமபத்திரன். மஞ்சக்கொல்லை.

சி. சுப்பிரமணியத்துக்கு இப்போது என்ன வந்துவிட்டது?

ராஜ்யசபா தேர்தலில் அவர் தோல்வி கண்டதற்கப்புறம், சிந்தங் குழம்பி இருப்பதாக நமது ''அப்பாலோ டுவல்வ்'' அறிவிக்கிறார்.

• • •

கம்யூனிஸ்டுகள் எப்படி இருக்கிறார்கள்?

கம்பீர நடை நடந்துகொண்டிருக்கிறார்கள் எதிர்காலத்தைநோக்கி. ஆனால் பாவம், நடக்கும் வழிதான் சரியானதாக இல்லை!

★

# "வரலாற்றில் அண்ணா"

—சி. இராமகிருஷ்ணன், பி.ஏ பி.எல்.—

பழங்கால வரலாற்றில், இதற்கு இணையான நிகழ்ச்சி, கோலாகல வாழ்வைத் துறந்து, மக்களின் நல்வாழ்வுக்குத் தன்னை ஈடுபடுத்திய புத்தரின் துறவே யாகும். இத்தகைய தியாக உணர்வையே நினைந்து,

"தமர்என்றும் தான்என்றும் நினைப்பதன்றித்
தமிழ்நாட்டின் நலனுக்கே உயிர் உடல்கள்
அமைகஎன இரவுபகல் உழைக்கும் மேலோன்"

என அண்ணாவைப் பாராட்டியதில் வியப்பென்ன?

"இன்பத் தமிழை அரியணை ஏற்றி
இனப்புகழ் போற்று இச்சை மிக்கோன்"

என்கிறார் நாமக்கல் கவிஞர்.

பாராண்ட தமிழ் ஆங்கிலேயரின் வரவால் அரியணையிலிருந்து இறக்கப்பட்டது. 'தமிழ் இனி மெல்ல மெல்லச் சாகும்' என ஆருடக்காரர் கூறினர். இந்த நிலையில் இந்தி என்னும் வளமற்ற மொழியையும் 1937-ம் ஆண்டு தமிழ் மக்கள்மீது அன்றைய அரசு திணித்தது. ஒரு பக்கம் ஆங்கிலம் என்னும் ஆழமான கடல், மறுபக்கம் இந்தி என்னும் பூதம் என்ற இரண்டு பெரும் இடுக்கண்களில் சிக்கியது தமிழ். 'இந்தி எப்பக்கம் வரும், எத்தனை பட்டாளம் கூட்டி வரும்" எனக் குரல் கொடுத்தார் பாவேந்தர் பாரதிதாசன். பகுத்தறிவுப் பகலவன் எனப் பல்லோர் பாராட்டும் பெரியார், தனித் தமிழ் இலக்கியத்தின் தந்தை மறைமலை அடிகள், ஆண்மைமிக்க நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற மூத்த பெருமக்கள், இந்தி எதிர்ப்பு எனும் அறப் போரைத் துவங்க, இளஞ்சந்ததியினரின் எழில்மிக்க தலைவன் அண்ணா, தமிழ் காக்கும் போரில், பல்லாயிர இளைஞருடன் தானும் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றார். தாளமுத்து, நடராசன் என்ற இரு தமிழ் வீரர்கள் தமிழ் காக்கும் பணியில் உயிர் துறந்தனர். அறப்போரின் ஆற்றலைத் தாங்கமாட்டாத அன்றைய அரசு 1940-ம் ஆண்டில் கட்டாய இந்தியை நீக்கியது.

1946-ல் இரண்டாம் முறையாக இந்தி தமிழ் நாட்டில் திணிக்கப்பட்டது. 1937-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் இளைஞரின் எழுச்சிமிக்க இளம் தலைவனாக விளங்கி அறிஞர் அண்ணா 1946-ல் எழுந்த இந்தி எதிர்ப்புப் போரில் நிகரற்ற தளபதியாகி; அறப்போர் கொடி தூக்கினார். 1950-ம் ஆண்டு அன்றைய அரசு மறுபடியும் இந்திப் பிடியைத் தளர்த்தியது. ஆனால் 1967-ம் ஆண்டு வரையில் இந்தி எதிர்ப்பு ஒரு தொடர் காவியமாகவே இருந்தது. 1967-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா தலைமையில் நடந்த இயக்கம் வெற்றி கண்டதன் பயன், இந்தி தமிழகத்தில் எந்த உருவத்திலும் ஆதிக்கம் செலுத்த இயலாது என்பது உறுதியாகித் தமிழ் அரியணை ஏறியபாங்கு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பெரும் சம்பவமாகும். அறிஞர் அண்ணா, பல்லாயிர மக்களின் துணைகொண்டு தன் ஊக்கத்தாலும் ஆக்கத்தாலும், அறிவாலும், ஆற்றலாலும், உறுதியாலும், துணிவாலும் நிகழ்த்திக்காட்டிய இச்சம்பவம், மாவீரன் சர்ச்சில், உலகப்போர் இரண்டிலும் காட்டிய துணிவையும் வெற்றியையுமே நம் கவனத்துக்குக் கொண்டு வருகின்றது. 1914—1918-ல் நடந்த முதல் உலகப்போரில் உறுதியான, ஆனால் குறைந்த பங்கே ஏற்று வெற்றி கண்ட ஆண்தகை சர்ச்சில். 1939–1944-ல் நடந்த இரண்டாம் உலகப் போரில் நிகரற்ற பங்கு ஏற்று சனநாயகத்துக்குற்ற பெரும் ஆபத்தைத் துடைத்தான என்பது வரலாறு ஆகும்.



பெருந்தகை அண்ணாவின் மொழிக் கொள்கை, உயர்ந்தது உறுதியானது. உயர் தனிச் செம்மொழியான தமிழ் மொழியே இந்தியத் துணைக் கண்டத்தின் தேசியமொழியாக இருப்பதற்கான சொல் வளமும், பொருள் வளமும் கொண்டது. இதை ஏற்கும் மனவளம் மற்ற மக்களுக்கில்லையென்றால் இந்தியத் துணைக்கண்டத்தில் வழங்கும் பதினான்கு மொழிகளும் தேசிய மொழிகளாக ஏற்றம் பெறுவதுடன், ஒப்ப வாய்ப்பும் பெற்றாக வேண்டும் என்பதே அவர் கொள்கை.

"தலைசிறந்த பேச்சு வல்லோன்"
—என்றார் பாரதிதாசன்

அறிஞர் அண்ணாவின் பேச்சில் சர்ச்சிலின் சொல் எழும், வன்மையும் எட்மண்ட் பர்க்கின் ஆழமும், சிசரோவின் சீர்மையும், டிமாசுதெனிசின்

மிடுக்கான மொழியும், மாவீரன் லெனினின் சிந்தனையும் தொனிக்கும். இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையில் அவர் பேசிய பேச்சு, இந்தியத் துணைக்கண்டத்தில் அவர் தன்னிகரற்ற சொல்வல்லோன் என உலகுக்குக் காட்டியது. யேல் பல்கலைக் கழகத்தின் விருதுபெறச் சென்று செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள், அமெரிக்க மக்களின் சிந்தனையைத் தூண்டியதுடன், இத்தகைய இனிய, வளமான, ஆழமான, பேச்சு வேறு எந்த இந்தியக் குடிமகனிடத்திலும் கண்டதில்லையென அவர்களை வியக்கச் செய்தது. அடுக்கு மொழியிற் பேச அண்ணாவுக்கு நிகர் அண்ணாதான். மேடைப் பேச்சிலே புதிய பாணியைக் கைக்கொண்டு, தமிழ் மொழியின் வளத்துக்கு உயிர் ஊட்டினார் என்றே கூறலாம். அண்ணாவின் பேச்சின் திறம் வியந்து, சிறந்த எழுத்தாளர் எனப் போற்றப்பட்ட கல்கி அவர்க்கு ''அறிஞர்'' என்ற விருதளித்துத் தம் இதழில் எழுதினார். அறிஞர் அண்ணாவின் பேச்சு இளைஞர்களை ஈர்க்கும், முதியவர்களை மகிழ்விக்கும்; செயல் வீரர்களை செயல் செய்யத் தூண்டும். ''கேட்டார்ப் பிணிப்பதாய், கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்'' அவரது சொல்லாகும். அவரது சொல்லைக் கேட்டால் ஞாலம் விரைந்து தொழில் செய்யும்.

'வாய் மொழியில் பண்ணுவான்' என வியந்து பாராட்டுகின்றார் திரு. வி. க. சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அறிஞர் அண்ணாவைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது ''ஆயிரம் மேடை ஏறிய அறிஞர்; பல்லாயிர மக்களின் உள்ளத்தை ஒருங்கே கவரும் சீரிய சொல்லாளர்; கண்ணின்று கண்ணறச் சொல்லும் திண்ணியர்'' எனக் கூறுகின்றார். பாரதிதாசன் 'தலைசிறந்த பேச்சுவல்லோன்' என இனிய மொழியால் கூறுவர். சுத்தானந்த பாரதி, அவர் உரைகள் தமிழர் மதிப்பையும், அம்மதிப்பைக் காக்கும் கொதிப்பையும் உண்டாக்கும் தீப்பொறிகள்'' என வியப்பார். ''அறிஞர் அண்ணா அவர்கள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் கேட்போர் வியக்கும் வண்ணம் பேசும் வளமான சொல்லாற்றல் நிரம்பியவர். அவர் பேசும் மேடைகளில் மற்றவர்கள் பேச்சு எடுபடுவது அரிது. தமிழ் நாட்டில் முப்பது ஆண்டுகளாக ஆற்றல் மிகுந்த பேச்சாளராக அவர் விளங்கி வருகிறார்,'' என மூதறிஞர் வரதராசனார் விளம்புகின்றார். தனது ஆற்றல் மிகுந்த பேச்சை நலிந்த ஒரு பெரும் சமுதாய நலனுக்கே பயன்படுத்திப் புதிய உலகைப் படைத்த பெருமை அண்ணாவையே சாரும். இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் மாவீரன் அண்ணா, 'தமிழா, தயங்காதே, துணிவு கொள்'' என ஆற்றிய பேருரை தமிழ் உள்ளளவும் ஒலித்துக்கொண்டிருக்கும்.

அறிஞர் அண்ணா ஒரு பெரும் புதுமை எழுத்தாளர்; இலக்கிய மேதை; கலைஞருள் ஏறு, எழுச்சி மிக்க சீர்திருத்தவாதி. தனது பேனா முனையை சாதி பேதமற்ற புதிய உலகைப் படைக்கவும் சமுதாயம் சீர்படவுமே பயன்படுத்தினார். சிறு கதைகள், நாவல்கள், சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள், மேலான நல்ல சீர்திருத்த நாடகங்கள் அவரால் படைக்கப்பட்டவையாகும். வேலைக்காரி, ஓரிரவு, நல்லதம்பி—நீதிதேவன் மயக்கம், சந்திரமோகன் போன்ற நாடகங்கள், சமுதாயத்தில் உலவும் நச்சுக் கொள்கைகளைச் சாடி, பெரும் எழுச்சியைத் தூண்டின எனத் துணிந்து கூறலாம், கலைத்துறையிலே அறிஞர் அண்ணாவின் மேதைமையை வியந்து பாராட்டிய பேராசிரியர் கல்கி, ''அறிஞர் அண்ணாவின் 'ஓர் இரவு' என்னும் நாடகத்தைப் பார்த்தேன்; பார்த்ததின் பயனாக இதோ ஒரு 'பெர்னார்டுசா தமிழ் நாட்டில் இருக்கின்றார், இப்சனும் இருக்கின்றார் என்று உணர்ந்தேன்'' எனக் கூறியுள்ளார்.

அண்ணாவின் எழுத்தாற்றலைக் கண்ட புலவர் குழந்தை கூறுவதாவது:

பாலெல்லாம் நல் ஆவின் பாலாமோ
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ—

என்பதுபோல் 'எழுத்தெல்லாம் அண்ணாவின் எழுத்தாமோ' என்கின்றார். அறிஞர் பெருந்தகையின் எழுத்து வன்மையால், தமிழுக்குப் புதியவளம் ஆக்கம், புகழ்மிக்க அத்தியாயம் தோன்றியதென்பதை எவரும் உணர்வார்; தமிழ் புதுப்பொலிவு பெற்றது; தமிழ் பேசும் மக்களை புதிய தெம்புடன், புதிய உலகு நோக்கி நடைபோடுகின்றனர்.

''துன்பப் படுவோர் துயர் துடைக்கத்
துடிதுடித்தோடும் தொண்டர் தலைவன்''

எனப் பாராட்டுகிறார் நாமக்கல் கவிஞர்.

எளியவர்களின் துயர் துடைக்கும் பணியிலே தம் அறிவையும், ஆற்றலையும், செயல் திறனையும் ஈடுபடுத்திய செம்மல் ஆப்ரகாம் லிங்கன், பாட்டாளி மக்களின் நண்பன் மாவீரன் லெனின், எளிய வாழ்வு நடத்திய காந்தியடிகள் போன்ற சான்றோர் வரிசையில் வைத்து எண்ணத்தகுந்தவர் அறிஞர்அண்ணாவாகும். புயல் மக்களை வருத்தியபோதும், கடும்தீயால்குடிலைகள் எரிந்தபோதும், விலைவாசியால் எளியவர் வாடியபோதும் அண்ணா துடிதுடிப்போடு, துயர்துடைக்கும்பணியிலே ஈடுபட்டது எல்லோரும் அறிந்ததொன்றாகும். எளியவர் துயர் நிலையாக அகன்றிட மாமருந்தாம் சமதர்மக் குடியரசு காண விழைந்தார், அண்ணாவின் ''படியரிசித் திட்டம்'' நலிந்த மக்களின் துயர் துடைக்க வகுத்த மிகப்பெரிய திட்டமாகும். பொருளாதார வித்தகர்கள் அரிசித் திட்டத்தைப் பற்றி எத்தகைக் கருத்துக் கொண்டிருந்த போதிலும், உணவு எளிய மக்களின் கைக் கெட்டும் தூரத்தே கொண்டு வரப்படவேண்டும் என்ற பெரு நோக்குடன் வரைந்த திட்டம் என்பதில் ஐயமேயில்லை. வள்ளுவப் பெருந்தகை தமது திருக்குறளில்

''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு''

என்று அரசின் கடமையைப் பற்றித் தெளிவாகச் சொல்லிச் சென்றார். உண்டாக்கப்பட்ட பொருளை, ஆதிக்கக்காரர்கள், அக்ரமக்காரரிடமிருந்து காத்து, காத்த பொருளை, எல்லோரும் அடையும்படி வகுப்பதே அரசின் கடமை என்பதே இக்குறளுக்குக் கொள்ளப்படும் உரையாகும். அண்ணா அவர்கள் இதை மனதில் கொண்டே, விளைக்கப்பட்ட உணவுப் பொருள் ஆர்ப்பாட்டக்காரரின் கைக்குச் சென்றுவிடாமல் எளியவரின் கைக்கே செல்ல இத்திட்டத்தை வகுத்தார். ''படி அரிசி அளந்த அண்ணா நீ'' என்றே ஒரு புலவர் பாடுகின்றார். 'படி அளந்த அண்ணா'' என்றே இனி வரலாறு கூறும்.

பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட சாதி பேதமற்ற சமய பூசலற்ற, ஏழை பணக்காரனற்ற ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க முனைந்தவர்களின் வரிசையில் அறிஞர் அண்ணாவுக்கு ஒரு நிலையான

இடம் உண்டு என்பதை எவரும் மறுக்கார். சமுதாயத்தில் சாதியால் ஏற்பட்ட பேதங்கள் கணக்கிலடங்கா; சாதி போதத்தை வைத்துக் கொண்டு புதிய சமுதாயத்தை உருவாக்குவது என்பது இயலாது. முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாய்த்தான் முடியும் என்று எடுத்துரைத்தார். சனநாயகம் வெற்றி பெற, புதிய சமுதாயம் உருவாக சாதிபேதங்கள் அடியோடு ஒழிக்கப்படல் வேண்டும் என்பதைத் தெளிவாக உணர்ந்தார் அண்ணா. ஒரு பத்தாண்டுகள் இந்த நாட்டின் பத்திரிகைகள், அரசியல் வித்தகர்கள், பகுத்தறிவு வாதிகள் இன்னோருடன் அரசும் ஒன்று சேர்த்து ஒரு முகமாக சாதியை ஒழிக்கும் பணியில் ஈடுபட்டால் சாதி பேதம் அறவே ஒழிந்த புதிய சமுதாயம் உருவாகும் என உளமாற நம்பிய பெருந்தகை அதைச் செயல்படுத்தும், முன் மறைந்தது பெரும் இழப்பாகும். அறிஞர் தாம் ஆட்சி பீடம் ஏறியதும், சுயமரியாதைத் திருமணம் ஒப்புக்கொள்ளப்பட்ட நல்ல முறையே என சட்டம் வகுத்ததும், கலப்புத் திருமணம் செய்து கொண்ட மணமக்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டமும், அரசு அலுவலகங்களிலிருந்து சாமிபடங்களை அகற்றியதும, அண்ணா சமுதாயத்தில் பேதங்களை நீக்கவும் மதத்தின் பிடியைத் தளர்த்தவும் துணிவுடன் செய்த செயல்களாகும். உலக வரலாற்றில் இதற்கிணையான சீர்திருத்தங்களைச் செய்தவர், நலிந்து பல கவைக்கொவ்வாத கண்மூடி வழக்கங்களால் சிதைவுண்டு கிடந்த துருக்கி மக்களை ஒன்றுபடுத்தி, கண்மூடி வழக்கங்களை யெல்லாம் மண்மூடச் செய்த சீர்திருத்தச் செம்மல் கமால் பாட்சாதான்.

அறிஞர் அண்ணா அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய பேருரை அவர்தம் சீரிய கொள்கைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. "நாம் பலகாலம் நசிந்துபோன எண்ணங்களைக் கொண்டே செயல்பட்டு வருகிறோம்; மதம் பொய்யான சடங்குகளையே கொண்டதாகத் தோன்றுகிறது; ஒரு காலத்தில், சாதி பேதமற்ற, ஏழை பணக்காரனற்ற நம் சமுதாயம், இன்றைக்கு உயர்வு தாழ்வு கற்பிக்கும் சமுதாயமாக பிரிந்து நிற்கின்றது. நம் அறியாமையினால், இந்த நிலை நீடித்து நிற்கும்படி விட்டிருக்கின்றோம். ஆகவே சனநாயகத்தின் எதிரியான சாதியையும் விஞ்ஞான அறிவுக் கொவ்வாத கண்மூடி வழக்கங்களையும், உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு எதிராக நிற்கும் பல்வேறு கொடுமைகளையும் களைந்தெறிய அறப்போர் துவக்குங்காலம் வந்துள்ளது" என அறைகூவி அழைத்தார்.

ஒரு பெரிய பகுத்தறிவுவாதி சமூகத்தை ஆட்டிப் படைக்கும் மதக் கோட்பாடுகளையும், சாதி பேதத்தையும் ஒழிக்கும் நோக்கத்தையே மையமாகக் கொண்டு தொடங்கிய இயக்கத்தை வழி நடத்தி, வேட்டு முறையை நீக்கி ஓட்டு முறையிலேயே மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று ஆட்சி பீடம் ஏறினது உலகத்தில் எங்கும் நடக்காத ஒரு புதுமை எனலாம். இப்புதுமையைச் செய்து காட்டிய அண்ணா உலக வரலாற்றிலும் மதிக்கத்தக்க இடத்தைப் பெற்று விட்டார்.

அரசியலிலேயே, ஒரு புதிராகவே இருந்த அண்ணா, பின்னர் பல்லோர் போற்றும் அரசியல் தலைவராக மிளிர்ந்தார்.

"இரும்பம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு."

என்ற குறளுக்கு அண்ணா இலக்கணமாகத் திகழ்ந்தார் என்றால் மிகையாகாது. தமது அன்பாலும், அருளுள்ளத்தாலும், பரந்த நோக்காலும், பல்லோரை ஈர்க்கும் வசியத்தாலும், உள்ளத்தில் பொய்யாது ஒழுகிய முறையாலும் எல்லா மக்களின் உள்ளத்திலும் நீங்காத இடத்தைப் பெற்ற அரசியல் வித்தகர்.

சர்ச்சில், நேரு, லெனின் போன்ற பெருமக்கள், வியத்தகு செயல்களை துணிந்து ஆற்றி வெற்றி கண்டதின் காரணம், அவர்கள் தலைமை தாங்கிய இயக்கத்தில் அவர்களை மிஞ்சினவர் யாருமில்லை; இயக்கத்தில் பங்கு கொண்டு எல்லோரும் அவர்களுக்கு நல்ல விசுவாசமுள்ளவர்களாகவும், இட்ட பணியைத் தலைமேல் ஏற்று, கீழ்ப்படிந்தவர்களாகவும் இருந்ததுதான். அறிஞர் அண்ணா அப்பெருமக்களைப் போன்றே, சில வேளைகளில் அவர்களையும் மிஞ்சும் அளவுக்கு இயக்கத்தில் செல்வாக்குப் படைத்திருந்தார். "தம்பியுடையான் படைக்கஞ்சான்" என்ற சொல்லுக் கேற்ப, அண்ணா வியத்தகு செயல்களைச் செய்வதற்கு அவர் கீழ் பல்லாயிரம் தம்பிகள் திரண்டு நின்றதுதான் காரணம். அண்ணா என்ற பாசத்தால் கட்டுண்டு, போர்க்களத்தில் தளபதி இடும் கட்டளைகளைத் தாங்கிக் கீழ்ப்படியும் போர் மறவர்களைப் போன்றே, அண்ணா இட்ட பணிகளைச் செவ்வனே செய்தனர் பல்லாயிரம் தம்பிகள். அண்ணா அளித்த மந்திரச் சொற்கள் "கடமை, கண்ணியம், கட்டுபாடு" ஆகும்.

இந்திய அரசியலிலே, மாநில அரசும் மத்திய அரசும் எங்ஙனம் இணைந்து வாழவேண்டுமென்பதை, தமது அறிவின் திறனால் வழி காட்டினார். பாரத பிரதமர் இந்திராகாந்தி, 'மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் இடையே நல்ல உறவை வளர்த்து, இந்திய ஒருமைப் பாட்டுக்கு வழி காட்டிய பெருமகன் அண்ணா' என்று பெருமிதத்துடன் கூறுகின்றார். அண்ணா பெயரால் ஒரு பல்கலைக் கழகமே இயங்கவேண்டியதின் அவசியத்தையும், அவர் பெயரால் லெனின் பரிசு, நேரு பரிசு போன்று சீரிய தமிழ்த்தொண்டாற்றுவோர்க்கோ, சமுதாய சீர்திருத்தச் செம்மல்களிக்கோ 'ஒரு பரிசுத் திட்டம்' ஏற்படுத்த வேண்டும் என்பதையும் இங்கு வலியுறுத்துகின்றோம்.

புலவர் கோவிந்தன் கூறியதுமாதிரி, வள்ளுவனை ஈன்று தமிழகம் வான்புகழ் கொண்டது; இன்று தமிழகம் அண்ணாவால் பெருமையுறுகின்றது. கலைஞர் கருணாநிதி அவர்கள், வள்ளுவனின் மறுமதிப்பே அண்ணா எனக் கூறுகின்றார். தமிழகம் அண்ணா மறைந்த காலை உகுத்த கண்ணீரின் பொருள் நமக்கு விளங்குகின்றது.

நேற்று வரையில் அண்ணா தென்னகத்திற்கு உரியவராக இருந்தார்; இன்று இந்தியத் துணைக் கண்டத்திற்குச சொந்தமானார்; நாளை வரலாற்றில் இடம் பெறுகின்றார்.

12-ம் பக்கத் தொடர்ச்சி

ஜி. ஜெகதீசன், காஞ்சிபுரம்,

மரணத்தை என்னால் வென்றுவிட முடியும் என்று நம்புகிறேன். நீங்கள்?...

**நீங்கள் ஒன்றும் மனநோய் மருத்துவ மனையிலிருந்து இதைக் கேட்கவில்லையே என்று யோசிக்கிறேன்!**

எஸ். சுந்தரராசன். மதுரை.

கடமை பெரிது என்று கருதுபவர்கள் யாராவது இருக்கிறார்களா?

**இருந்தார்களா என்று கேட்டிருந்தால்தான் சரியான பதில் தர முடியும், சிலபேர் இருந்தார்கள் என்று!**

• • •

ஆற்றொழுக்கான எழுத்துநடை என்பது எது?

**அறிஞர் அண்ணா அவர்களது எழுத்து நடை என்றால் புரிந்து கொள்வீர்களா?**

கே. குமாரசாமி, விழுப்புரம்.

மதுவும் மங்கையும் ஒன்று என்பது எதனால் என்று கூறுவீர்களா?

**இரண்டிற்கும் போதையுண்டு. இரண்டினாலும் மயக்கம், தயக்கம் திகைப்பு உண்டு என்பதனால் இருக்குமோ?**

• • •

நடிகர்களின் பேரால் மன்றங்கள் இருக்கலாமா?

**இவைபோன்ற வினாக்களை 'காஞ்சி' அனுமதிப்பதில்லை.**

ஏ. ராஜேந்திரன், மன்னார்குடி.

காதலுக்கு வேலிகட்ட முடியும் என்ற என் கருத்தை ஏற்க உங்களால் முடியுமா?

**கரை உடைத்து வரும் காட்டாற்று வெள்ளத்தை, அணை போட்டுத் தடுக்க முடியும் என்பதை என்னால் ஏற்க முடியாதைய்யா!**

*

# சேலம் உருக்காலை
## மறு பரிசீலனை

★

சேலம் உருக்காலை அமைப்பது சம்பந்தமான திட்டத்தை மறுபரிசீலனை செய்து தயாரிக்கத் தஸ்தூர் நிறுவனத்தை மத்திய அரசு கோரியிருக்கிறது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருக்கும் திட்டம் 1964ல் தயாரிக்கப்பட்டதாகும்; ஆகவே இநத 6 ஆண்டுகளில் பல மாறுதல்களும் ஏற்பட்டிருக்கிறது; இதைக் கவனத்தில் கொண்டு திட்டத்தை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும் என்று மத்திய அரசு கருதுகிறதாம்.

புதிய உருக்காலைகள் குறித்து தலைமையமைச்சர் வெளியிட்ட அறிவிப்புக்குப்பிறகு, மத்திய உருக்குத் துறை எடுத்த ஒரே நடவடிக்கை இதுதான் என்று கூறப்படுகிறது.

சேலம் உருக்காலைக்குத் தனி நிறுவனம் அமைத்து நிர்வகிக்கப்படவேண்டும் என்றும், அதில், மாநிலஅரசுக்குச் சமமான கூட்டுப் பொறுப்பு அளிக்கப்படவேண்டும் என்பதுடன், நிர்வாகக் குழுவில் கணிசமான பிரதிநிதித்தும் தரப்படவேண்டும் என்றும் தமிழ்நாடு அரசு கோரியிருந்தது; இதற்கு இன்னும் மத்திய அரசு பதில் அனுப்பவில்லை என்று தெரிகிறது.

ஆயினும், இந்த யோசனைக்கு டெல்லி எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை என்றும் கூறப்படுகிறது. மாநில அரசின் யோசனைகளை ஏற்றுக்கொள்ள மத்திய அரசு முன்வரும் என்றே நம்பப்படுகிறது; இது குறித்து விவாதிக்க, மத்திய அமைச்சர் கே. சி. பந்த் சென்னைக்கு வருகை தரவிருக்கிறார்.

இதர மாநில அரசுகளும் இதே கோரிக்கையினை எழுப்பியிருப்பதாகவும் தெரியவருகிறது.

நெய்வேலித் திட்டம் நிறைவேறினால், 2000 எஞ்சினியர்கள்-தொழில் நுட்ப நிபுணர்கள் போன்றோருக்கும், 10,000 ஏனைய தொழிலாளருக்கும் வேலை வாய்ப்பு ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

இத்திட்டத்திற்கு ரு. 100 கோடி முதலீடு தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ.இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3 ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.